வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ஈළනාඩු

மாருதி
Money Exchange (Pvt) Ltd.
MARUTHI MONEY EXCHANGE
PERMIT NO:DFE/RD/0117
390, HOSPITALROAD, JAFFNA.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 17.05.2025 சனிக்கிழமை இதழ் : 138 பக்கங்கள் : 12

# வடக்கு, கிழக்கு சபைகளில் தமிழ் கட்சிகளின் ஆட்சி!

## தமிழ் அரசு, காங்கிரஸ், கூட்டணி யாழ்ப்பாணத்தில் கூடிப் பேசின

ஆளும் கட்சி ஆட்சியமைக்க இடமளிப்பதில்லை என்றும் முடிவு

யாழ்ப்பாணம், மே 17

**வடக்கு, கிழக்கில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் தமிழ் கட்சிகளே ஆட்சி அமைக்க வேண்டும். இந்த சபைகள் தேசிய மக்கள் சக்தியின் வசம் செல்வதற்கு அனுமதிக்கக்கூடாது - இவ்வாறு நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் கூடிப் பேசிய இலங்கை தமிழ் அரசுக் கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியவை தீர்மானித்துள்ளன என்று கூறப்படுகிறது.**



நல்லூரில் அமைந்துள்ள தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரனின் இல்லத்தில் நேற்று இரு சந்திப்புகள் நடந்தன. தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம், பதில் பொதுச் செயலர் எம். ஏ. சுமந்திரன் ஆகியோரை ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியினர் சந்தித்து பேசினர். இதன் பின்னர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரும் சந்தித்தனர். இந்த சந்திப்புகளிலேயே மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இந்த சந்திப்புகளில் ஓர் உள்ளூராட்சி சபையில் கூடுதலான ஆசனத்தை பெற்ற கட்சி அந்த சபையில் ஆட்சி அமைக்கும். இதற்கு மற்றைய கட்சிகள் ஆதரவு வழங்கவேண்டும் என்றும் தீர்மானம் எட்டப்பட்டது. எனினும், இந்தத் தீர்மானத்துக்கு மேலதிகமாக

11

காணி சுவீகரிப்பு வர்த்தமானி:

# “28ஆம் திகதிக்குள் இரத்து; இல்லையேல் போராட்டம்!”

## தமிழ் அரசுக் கட்சி அறிவிப்பு

**- சி.தில்லைநாதன் -**



வடமராட்சி, மே 17

வடக்கு மாகாணத்தில் மக்களின் காணிகளை சுவீகரிப்பது தொடர்பில் வெளியான வர்த்தமானி மீளப் பெறப்படவேண்டும். இதனை எதிர்வரும் 28ஆம் திகதிக்குள் உறுதி செய்ய வேண்டும். இல்லையேல், மறுநாள் 29ஆம் திகதிமுதல் நாட்டை மட்டுமல்ல, உலகையே உலுக்குமளவுக்கு போராட்டம் முன்னெடுக்கப்படும்”, இவ்வாறு தெரிவித் துள்ளார் இலங்கை தமிழ் அரசு

11

# உப்பள தொழிலாளரின் போராட்டத்துக்கு தடை!

கிளிநொச்சி, மே 17

ஆனையிறவு உப்பள தொழிலாளர்களின் போராட்டத்துக்கு நீதிமன்ற தடை உத்தரவை பொலிஸார் பெற்றுள்ளனர். இதைத் தொடர்ந்து, போராட்டம் நடைபெறும் இடத்தில் பெருமளவிலான பொலிஸாரும் நேற்றையதினம் குவிக்கப்பட்டிருந்தனர்.

“எமது நியாயமான போராட்டத்தை நிர்வாகம் அடக்குவதற்கு முயற்சிப்பது வேதனை தருகிறது.”, என்று உப்பளத் தொழிலாளர்கள் இதன்போது வேதனை தெரிவித்துள்ளனர்.

11

# முன்னிலை வகிக்கும் கட்சிக்கே உள்ளூராட்சியில் ஆட்சியுரிமை!

## தமிழ், முஸ்லிம் கட்சிகளுடன் இணக்கம் எட்டப்பட்டதாக சுமந்திரன் அறிவிப்பு!

வடமராட்சி, மே 17

வடக்கு, கிழக்கில் உள்ளூராட்சி சபைகளில் முன்னிலை வகிக்கும் கட்சிக்கு தவிசாளர் பதவியை வழங்குவது என்றும், ஆதரவளிக்கும் கட்சிக்கு உபதவிசாளர் பதவியை வழங்குவது எனவும் தமிழ்த் தேசிய கட்சிகள், முஸ்லிம் கட்சிகளுடன் இணக்கம் எட்டப்பட்டுள்ளது என்றும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று வடமராட்சி ஊடக இல்லத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

“உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பில் நாங்கள் தற்போது நடவடிக்கைகளை

11

# தமிழின படுகொலை கொடூரம் மீளநிகழாமையை உறுதிசெய்க!

## அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்



வாஷிங்டன், மே 17

தமிழின படுகொலையின் போது இடம்பெற்ற கொடூரங்கள் மீளநிகழாமையை உறுதி செய்யவேண்டும் என்று அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் டொன் டேவிஸ் வலியுறுத்தியுள்ளார்.

முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பின் 16ஆவது ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், இன்றும் என்றும் நாங்கள்

11

# சிறாரிடையே நோய் தாக்கம் அதிகரிப்பு!

கொழும்பு, மே 17

சிறுவர்களிடையே இன்புளுவன்ஸா, டெங்கு, சிக்குன்குனியா ஆகியவற்றின் தாக்கம் அதிகரித்து வருகிறது என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இன்புளுவன்ஸா நோய்த் தாக்கமே சிறாரிடையே மிக அதிகமாக உள்ளது. விடுமுறை நாட்களில்

11

உள்ளூராட்சி சபைகளின் ஆட்சி

# எதிர்க்கட்சிகள் வசமானால் அபிவிருத்தி தடைப்படும்!

## ஆளும் கட்சி எச்சரிக்கை

கொழும்பு, மே 17

“பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்கள் மத்திய அரசாங்கத்தின் நிதியை சார்ந்தே உள்ளன. எதிர்க்கட்சிகள் உள்ளூராட்சி சபைகளை அமைத்தால் பிரதேச அபிவிருத்தி தடைப்படும்”, என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் கொழும்பில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகள் கூட்டாக உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்க முயற்சிப்பது ஜனநாயக விரோத செயல். உள்ளூராட்சி அமைப்புகளில்

11

# கிருமி தாக்கத்தால் குழந்தை மரணம்!

யாழ்ப்பாணம், மே 17

நுரையீரலில் ஏற்பட்ட கிருமி தாக்கத்தால் இரண்டு மாத குழந்தை உயிரிழந்தது.

நீர்வேலி தெற்கை சேர்ந்த தருண் பிரதீஸ் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்தது.

காய்ச்சல், சளி காரணமாக குழந்தை யாழ்.போதனா மருத்துவமனையில் அண்மையில் சேர்க்கப்பட்டது. இந்த நிலையில், குழந்தை சிகிச்சை

11

# இலங்கையை பொறுப்புக்கூற செய்யும் திட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுங்கள்!

## ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம் மனித உரிமை கண்காணிப்பகம் கோரிக்கை

நியூயோர்க், மே 17

இலங்கை தொடர்பில் ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணிமனையால் முன்னெடுக்கப்படும் “பொறுப்புக்கூறல் செயல்திட்டம்“ எதிர்வரும் செப்ரெம்பர் மாத கூட்டத்தொடரில் மீள புதுப்பிக்கப்பட வேண்டும். இசைப்பிரியா போன்ற பெண்கள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் தாய்மார் உள்ளடங்கலாக, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான நீதியை நிலைநாட்டுவதற்கு அந்த செயல்திட்டம் தொடரவேண்டியது மிக அவசியம் - என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

நாட்டில் மூன்று தசாப்த காலம் நீடித்த போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட 16ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இந்திய மீனவர்கள் எல்லை தாண்டுவதை ஏற்கமுடியாது

## இந்திய சட்டத்தரணி சிவஞானசம்பந்தம்

யாழ்ப்பாணம், மே 17

இந்திய கடற்றொழிலாளர் இலங்கை கடற்பரப்பில் நுழைந்து கடல் வளங்களை சூறையாடுவது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம். இலங்கை கடற்றொழிலாளர்கள் நிம்மதியாக வாழ நிரந்தர ஏற்பாடுகள் அவசியம் என்று தெரிவித்துள்ளார் இந்தியாவின் காந்திய சமதர்ம இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் சட்டத்தரணி சிவஞானசம்பந்தம்.




அத்துடன், மலையகத் தமிழ் மக்களுக்கு காணி உரிமங்கள் வழங்கப்பட்டு அவர்களும் இந்த நாட்டின் இறைமைமிக்க மக்களாக வாழ்வதற்கு அநுர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

மலையக தமிழ் மக்கள் எதிர்நோக்கும் வாழ்வாதார பிரச்னைகள் தொடர்பில் கண்டறிவதற்காக இலங்கை வந்த அவர் நேற்று யாழ். ஊடக அமையத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், மலையக மக்கள் இலங்கையின் பொருளாதாரத்தை நிர்ணயிக்கும் பெரும் சக்தியாக இருக்கின்றபோதிலும் அவர்களின் வழ்வாதாரத்தை முன்னேற்றும் வகையில் அரசாங்கங்கள் எதனையும் செய்வதில்லை.

இதனால் நாளந்த வருமானத்தை பெறுவதில்கூட பெரும் அசௌகரியங்களை சந்திக்க நேரிடுகின்றது. இந்த நிலையை அரசு மாற்றி அமைக்க வேண்டும். இந்தக் கோரிக்கையை இந்திய தரப்பினருக்கும் முன்வைக்க இருக்கின்றேன்.

மலையக மக்களுக்கு அரசாங்கத்தால் இலவச வீடுகள் கட்டிக் கொடுக்கபடுகின்றன. ஆனால், அந்த வீடுகளுக்கான காணி உரிமங்கள் அவர்களுக்கு சொந்தமில்லை. தனியான முகவரிகள்கூட பலருக்கு இல்லை. அதுமட்டுமல்லாது வறுமையால் இடைநடுவில் பல மாணவர்கள் கல்வியை கைவிடுகின்றனர். இவ்வாறான பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்கப்பட வேண்டியது அவசியம் - என்றார். (ஐ)

# வடமராட்சி கிழக்கு இளைஞர்களால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல்!



வடமராட்சி, மே 17

தமிழின அழிப்பு வாரத்தில் முள்ளிவாய்க்கால் அவலத்தை நினைவுகூர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு வடமராட்சி கிழக்கிலும் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் முன்பாக ஒன்றிணைந்த இளைஞர்கள் இந்த நிகழ்வை முன்னெடுத்தனர்.

"உடல் சிதைந்து உயிர் மடிந்த குருதியில் நனைந்து போன நிலம் மறந்து போகுமா? முள்ளிவாய்க்கால்" என்னும் தொனிப்பொருளில் நடைபெற்ற இந்த அஞ்சலி நிகழ்விலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கலிலும் ஏராளமானவர்கள் பங்கேற்றனர். (ஐ-02-05)

# கண் சுகாதாரம் தொடர்பில் கலாசாலையில் கருத்தரங்கு



யாழ்ப்பாணம், மே 17

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கண் சுகாதாரம் பற்றிய கருத்தரங்கு கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு நடை பெற்றது.

யாழ். போதனா மருத்துவமனை கண் சத்திரசிகிச்சை நிபுணர் மருத்துவர் மு. மலரவன் வளவாளராக கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்.

ஆங்கிலநெறி ஆசிரிய மாணவர் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்வை தினேஷ் கௌசியா நெறிப்படுத்தினார். ஆசிரிய மாணவி டேவிட் லிஜானி அன்னையர் தின சிறப்புரையை ஆற்றினார். ஆசிரிய மாணவி தர்மினி சம்பத்குமார் மருத்துவர் மு. மலரவன் குறித்த அறிமுக உரையை வழங்கினார்.

கலாசாலை முகாமைத்துவ குழுவினரால் மருத்துவர் மு. மலரவன் கௌரவிக்கப்பட்டார். (ஐ)

# தமிழ் அரசு கட்சியின் கலந்துரையாடல் இன்று

யாழ்ப்பாணம், மே 17

அண்மையில் நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றங்கள் தேர்தலில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் இலங்கை தமிழ் அரசு கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற உறுப்பினர்கள், வேட்பாளர்களாக போட்டியிட்டவர்களுக்கான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது என்று அந்தக் கட்சயின் பதில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் அறிவித்துள்ளார்.

இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் - நல்லூரில் அமைந்துள்ள இளங்கலைஞர் மண்டபத்தில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது. (ஐ)

# அரங்கு திறப்பு விழா!

வடமராட்சி, மே 17

பருத்தித்துறை தும்பளை தெற்கு திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் அரங்கு திறப்பு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு நிலையத் தலைவர் செ. செல்வச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜெ. றஜீவன், சிறப்பு விருந்தினராக தும்பளை கிராம அலுவலர் சி. கௌதமன், கௌரவ விருந்தினராக பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் சி. அருள்ரூபன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ஐ-02)



# புதுமுக மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 17

யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள புது முக மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடாதிபதி பேராசிரியர் என். கெங்காதரன் தலைமையில், கலாசாலை வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

2023ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து, யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தில் 2024/2025 ஆவது கல்வி ஆண்டில் தொழில் நிருவாக மாணி மற்றும் வணிகமாணி கற்கைநெறிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட 540 மாணவர்கள், பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள், பதிவாளர், நிதியாளர் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர் நலனோம்பு பிரிவின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் உட்படப் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஐ)

# ஈழத்தின் பிரபல நர்த்தகி ரங்கா காலமானார்!



யாழ்ப்பாணம், மே 17

இலங்கையின் மிகச் சிறந்த நடன மணிகளில் ஒருவராக திகழ்ந்த ரங்கா விவேகானந்தன் நேற்று முன்தினம் காலமானார்.

இலங்கையில் முதன்முதலாக குச்சிப்புடி நடன வடிவத்தை முழுமையாக அறிமுகம் செய்த இவர், இந்த நடனத்தில் பிரபலமான ஒரு நர்த்தகியாக உலக அரங்கில் அறிப்பட்டார். குச்சுப் புடி நடன மேதை குரு வேம்பட்டி சின்னசத்தியத்தின் மாணவி இவர். நாட்டிய மேதை ராம் கோபால் போன்றவர்களின் அபிமானத்துக்குரியவராகவும் திகழ்ந்தார்.

ஜேர்மனியர் ஒருவரை மணம்செய்த ரங்கா, கடந்த சில ஆண்டுகளாக ஆர்ஜென்ரீனாவின் புவனஸ்அயர்ஸில் 'ஆனந்தராஜம்' என்ற நடன பள்ளியை அந்த நாட்டின் ஓர் இந்திய கலைக்கூடமாக அடையாளப்படுத்தினார்.

சாஸ்திரீயமான தனது கற்பித்தலில், ஆற்றல்மிக்க நர்த்தகிகள் சிலரையும் அங்கு உருவாக்கியிருக்கிறார்.

வல்வெடித்துறையை சேர்ந்தவரான ரங்கா விவேகானந்தன், 'ஆழிக்குமரன்' ஆனந்தனின் சகோதரி. இவருக்கு வயது 77 என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மடத்தடியில் முன்னணியினரால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல்



யாழ்ப்பாணம், மே 17

முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தில் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் மாநகரின் மடத்தடி பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் இந்தநிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மக்கள் உணர்வுபூர்வமாக பங்கேற்றிருந்தமையை அவதானிக்க முடிந்தது. (ஐ-05)

ஈழநாடு
Eelanadu
17.05.2025 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், வைகாசி 03

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## இனப்படுகொலை விவகாரம்

பொதுவாக முள்ளிவாய்க்கால் நினைவு நெருங்கும்போது போர் குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை தொடர்பில் பேசப்படுவது வழமையான ஒன்றுதான். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இனப்படுகொலை என்று ஒன்று நிகழவில்லை என்று முன்னைய ஆட்சியாளர்களின் நிலைப்பாட்டை மீளவும் உறுதிப்படுத்தியிருக்கிறது. அதற்கு என்ன ஆதாரங்கள் இருக்கின்றன என்றும் அரசாங்கம் கேள்வி எழுப்பியிருக்கிறது. விசாரணை இடம்பெற்றதால்தானே ஆதாரங்கள் இருக்கின்றனவா அல்லது இல்லையா என்பதை அறிய முடியும்.

இந்த அடிப்படையில் தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கேள்வி எழுப்பியிருக்கின்றனர். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இந்த அடிப்படையில் கேள்வி எழுப்பியிருக்கிறார் அதாவது, "இனப்படுகொலை விசாரணைக்கு ஏன் அஞ்சுகிறீர்கள்", என்று கேள்வி எழுப்பியிருக்கிறார். கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கேள்வி முற்றிலும் சரியானது. ஒரு குற்றம் இடம்பெறவில்லையாயின் விசாரணைக்காக ஏன் அஞ்சவேணடும்?

ஆனால், போர் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்த விசாரணைகள் "மயிலே மயிலே இறகு போடு" என்னும் அடிப்படையில் இடம்பெறுவதில்லை. போரை முன்னெத்த எந்தவோர் அரசும் தன்னுடைய போர் முன்னெடுப்பு தொடர்பான விசாரணைகளை விரும்பி அனுமதிக்காது. அவ்வாறான விடயங்கள் வரலாற்றில் பதிவாகவுமில்லை.

இந்த அடிப்படையில் இலங்கை அரசு இறுதி யுத்தம் தொடர்பான எந்தவொரு வெளியக விசாரணைகளையும் அனுமதிக்காது. ஒரு வலுவான அந்நிய தலையீடு இன்றி எந்தவோர் அரசும் இறங்கிவராது. ஆனால், அவ்வாறான அந்நிய தலையீடுகளை தற்போதுள்ள சர்வதேச அரசியல் சூழலில் பிரயோகிப்பதும் இயலாத காரியம்.

இலங்கை போன்ற நாடுகளை இறங்கிவரச் செய்வதற்கான ஒரேயொரு வழி இலங்கையின் வெளியுலகில் தங்கியிருக்கும் பொருளாதார பலவீனத்தை பயன்படுத்தலாம். ஆனால், இலங்கை பொருளாதார வங்குரோத்து நிலையை அடைந்தபோது, மனித உரிமைகள் சார்ந்து எந்தவோர் அழுத்தங்களும் ஏற்படவில்லை. பொறுப்புக்கூறலுக்கு உடன்பட்டால்தான் பொருளாதார மீட்சிக்கு உதவுவோம் என்று எவரும் வற்புறுத்தவில்லை.

அவ்வாறாயின், இலங்கையை இறங்கிவரச் செய்வதற்கு வேறு என்ன வழியுண்டு? கடந்த பதினைந்து வருடகால நீதி கோரும் தமிழர் அரசியலில் எந்தவொரு குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய முன்னேற்றங்களும் பதிவாகவில்லை. இனியும், முன்னேற்றங்கள் ஏற்படும் என்பதற்கான சாதகமான அரசியல் சூழலும் இருப்பதாகத் தெரியவில்லை.

புலம்பெயர் சூழலிலுள்ளவர்கள் தங்களை ஒருங்கிணைக்கும் ஒரு கருவியாக சில விடயங்களை பேணிவருகின்றனர். ஆனால், இன்றைய சர்வதேச அரசியல் அதிகம் அதிகார மோதலுக்குள் சிக்குண்டிருப்பதால், ஒருவர் இல்லாவிட்டால் இன்னொருவர் என்னும் தெரிவை நோக்கி நாடுகள் நடைபோடக் கூடியதோர் அரசியல் சூழல் உருவாகிவிட்டது.

ஒரு காலத்தில் அமெரிக்கா அதிகம் தன்னுடைய தேவைகளிலிருந்து மனித உரிமைகள் சார்ந்த விடயங்களை கையாண்டு வந்தது. ஆனால், சீனாவின் எழுச்சியும் அதன் தலைமையை ஆதரிக்கும் நாடுகளின் பெருக்கமும் அமெரிக்காவின் மனித உரிமைகள்சார் தலையீடுகளை மட்டுப்படுத்திவிட்டது. இதேவேளை, பிராந்தியங்களின் செல்வாக்கும் முன்னர் எப்போதும் இல்லாதவாறு உலக அரசியலை தீர்மானிக்கும் சக்தியாகி விட்டது.

குறிப்பிட்ட பிராந்தியத்தில் சில விடயங்களை முன்னெடுக்க வேண்டுமாயின் பிராந்திய சக்திகளின் அனுசரணையின்றி அதனை முன்னெடுக்க முடியாது. மேலும், ஈழத் தமிழருக்கு உதவுவது மற்றவர்களின் நலன்களுக்கு எந்த வகையில் பயன்படும் என்று கேள்வி எழுப்பினால் அதற்கான பதில் பூச்சியம். இந்த நிலையில் தமிழ் அரசியல்வாதிகளின் பருவகாலத்து கதைகளாகவே அனைத்தும் கடந்து போகும்.

## இலங்கை இலத்திரனியல் பொருட்களை இறக்குமதி செய்ய ஜப்பான் எதிர்பார்ப்பு

கொழும்பு, மே 17

இலங்கையிலிருந்து இலத்திரனியல் மற்றும் இலத்திரனியல் உற்பத்தி பொருட்களை இறக்குமதி செய்ய எதிர்பார்ப்பதாக ஜப்பான் தெரிவித்துள்ளது.

ஜப்பானின் வெளியுறவு வர்த்தக ஒழுங்கமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி ஹிரோகி ஓய் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜப்பானுக்குத் தேவையான இலத்திரனியல் மற்றும் இலத்திரனியல் உற்பத்தி பொருட்களுக்கான அதிக வாய்ப்புள்ள நாடாக இலங்கை பார்க்கப்படுகிறது.

ஜப்பானின் தொழில் முறையுடன் இலங்கையின் தொழில்முறையும் ஒத்துச் செல்வதாக அமைகிறது.

அத்துடன் இலங்கையில் உற்பத்திச் செலவுகளும் குறைவாக இருக்கிறது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## தவறாக பயன்படுத்தப்பட்ட அரச நிதி; லக்ஷ்மன் யாப்பாவுக்கு எதிராக வழக்கு!

கொழும்பு, மே 17

முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன உட்பட இருவர் மீது இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு வழக்குத் தொடர நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த 2014ஆம் ஆண்டு, அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவி நிறைவு ஆண்டு விழாவை முன்னிட்டு இலங்கை முதலீட்டு சபையின் நிதியை பயன்படுத்தி 11 பத்திரிகைகளில் விளம்பரங்கள் வெளியிடப்பட்டதன் மூலம் அரசாங்கத்துக்கு 17 இலட்சம் ரூபாய்க்கும் மேல் நட்டம் ஏற்படுத்தியமை தொடர்பிலேயே இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது.

முன்னாள் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன, இலங்கை முதலீட்டு சபையின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் ஜயந்த எதிரிசிங்க ஆகியோர்மீதே இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது.

கடந்த, 2014 நவம்பர் 19 அன்று, மகிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவி நிறைவு விழாவை முன்னிட்டு, 11 பத்திரிகைகளில் இலங்கை முதலீட்டு சபையின் நிதியை பயன்படுத்தி விளம்பர இணைப்புகள் வெளியிடப்பட்டன. இதன் மூலம், 17 இலட்சத்து 48 ஆயிரத்து 877 ரூபாய் 76 சதம் அரசாங்கத்துக்கு நட்டம் ஏற்படுத்தப்பட்டது. இது ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றம் என்றும் தெரிவித்தே இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது. (ஐ)

## சாமர சம்பத் எம். பியின் பிணையை நிராகரிக்க கோரிய வழக்கு இரத்து!

கொழும்பு, மே 17

பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்காவின் பிணையை இரத்துச் செய்யுமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

ஊழல் குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய புதிய ஜனநாயக முன்னணி கட்சியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்கவின் பிணைக்கு எதிரான வழக்கு நேற்றைய தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இந்த வழக்கை நேற்றைய தினம் கொழும்பு நீதிவான் நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்தது. இலஞ்சம், ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு நீதிமன்றில் முன்வைத்த சாட்சியங்கள் போதுமானதாக இல்லை என்பதால் இந்த மனுவை நிராகரிப்பதாக நீதிவான் தனுஜா லக்மாலி தீர்ப்பில் கூறியிருந்தார். (ஐ)

## 10 மாணவர்களின் மறியல் நீடிப்பு

கொழும்பு, மே 17

பகிடிவதை காரணமாக சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவன் தவறான முடிவு எடுத்து உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைதான 10 மாணவர்களின் விளக்கமறியல் எதிர்வரும் 29ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே பலாங்கொடை நீதிவான் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்தது.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தைச் சேர்ந்த 23 வயது மாணவன் கடந்த ஏப்ரல் மாதம் உயிரிழந்தார். இந்த சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வு அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு

மே - 17 சனிக்கிழமை
விசுவாவசு வருடம் - வைகாசி 03
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : பஞ்சமி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். புதிய நட்பால் ஆதாயமும் உண்டு. தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். மற்றவர்களை முழுமையாக நம்பிக் கொண்டிருக்க வேண்டாம். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும்.

**மிதுனம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். தாய்வழி ஆதரவு பெருகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**கடகம்**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்களால் நன்மை உண்டு. எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். அமோகமான நாள்.

**சிம்மம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் இருந்து வந்த பிரச்னைகள் விலகும்.

**கன்னி**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும். புது வேலைகிடைக்கும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**துலாம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். சொந்த-பந்தங்கள் தேடி வருவார்கள். உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். தைரியம் கூடும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். பழைய சிக்கலில் ஒன்று தீரும். அலுவலகத்தில் மரியாதை கூடும். தடைகள் உடைபடும்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். உத்தியோகத்தில் அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம். இடம், பொருள், ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**மகரம்**
கணவன் மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது. தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வீட்டை அழகுபடுத்துவீர்கள். விருந்தினர் வருகை அதிகரிக்கும். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை கூடும்.

**மீனம்**
தவறு செய்பவர்களை தட்டிக்கேட்பீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.

# இனப்படுகொலையை மறுப்பது இனவாதத்தின் வெளிப்பாடுதான்

## சிறீதரன் எம். பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 17

இனப்படுகொலையை இல்லையென்பது இனவாதத்தின் வெளிப்பாடே என்று பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

ஈழத்தமிழர்கள் மீது இனப்படுகொலை மேற்கொள்ளப்படவில்லை என்று கூறும் சிங்களப் பேரினவாதிகள், உலகத்தின் கண்களையும் மனச்சாட்சியையும் மறைக்கப் பார்க்கிறார்கள். காலங்காலமாக எங்கள் மீது புரியப்பட்ட இனப்படுகொலையின் கறைபடிந்த வரலாற்றின் நாளான குமுதினிப் படுகொலையின் 40ஆவது ஆண்டு நினைவேந்தலில், வலிசுமந்த நெடுந்தீவு மண்ணிலிருந்து, கனேடியப் பிரதமருக்கும் பிரம்டன் நகர முதல்வருக்கும் எனது நன்றிகளைப் பகிரங்கமாகத் தெரிவிக்கிறேன் எனவும் சிறீதரன் எம். பி. கூறினார்.

நேற்று முன்தினம் நெடுந்தீவில் நடைபெற்ற குமுதினிப் படுகொலையின் 40ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் பங்குகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குமுதினிப் படகில், குருநகர் கடலில், கொக்கட்டிச்சோலையில், சத்துருக்கொண்டானில், வாகரையில், நவாலியில், நாகர்கோயிலில் தொடங்கி முள்ளிவாய்க்கால் வரை கொத்துக்கொத்தாக எங்களை கொன்றொழித்துவிட்டு, ஈழத்தில் இனப்படுகொலை நடைபெறவே இல்லை என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தும், நாமல் ராஜபக்ஷவும், அலி சப்ரியும் தெரிவித்துள்ள கருத்துகள் உலகத்தின் மனச்சாட்சியை உலுக்கத்தக்க, சிங்கள வல்லாதிக்க வெளிப்பாட்டுக்குரியவை. அத்தகைய கருத்துகளை முன்வைத்தோர்க்கு எதிராக நான் எனது வன்மையான கண்டனங்களைப் பதிவுசெய்கிறேன்.

இத்தகைய இனவாதம் கொப்பளிக்கும் இலங்கையின் ஆட்சியாளர்களுக்கு மத்தியில், ஈழத்தில் நடந்தது இனப்படுகொலைதான் என்பதற்கான சர்வதேச சாட்சியமாக, பிரம்டனில் இனப்படுகொலை நினைவுத்தூபியை நிறுவிய கனேடிய பிரதமர் மார்க் ஹனி, பிரம்டன் நகர முதல்வர் பற்றிக் பிரவுண் ஆகியோரோடு, இதற்கு காரணமான அனைவருக்கும் எமது நன்றிகள்- என்றார். (எ-05)





# சங்கானையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி

யாழ்ப்பாணம், மே 17

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ஏற்பாட்டில் நேற்று சங்கானை நகரப் பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

போரில் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக முன்னாள் போராளி ஜெயசீலன் நினைவுச் சுடர் ஏற்றினார். இதன்பின்னர் இறுதி யுத்தத்தில் உயிரிழந்த உறவுகளின் ஆத்ம சாந்திக்காக இரண்டு நிமிடம் அகவணக்கம் செலுத்தப்பட்டது. தொடர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

இதில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ச. சுகிர்தன், பிரதேச சபை உறுப்பினர்களான ஜெயந்தன், கந்தையா இலங்கேஸ்வரன், ஜெசிந்தன், ஆதவன் உள்ளிட்ட கட்சியின் உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர். (எ-05)

# முள்ளிவாய்க்கால் அவலத்தை நினைவு கூர்ந்து வவுனியாவில் நேற்று கஞ்சி வழங்கப்பட்டது






வவுனியா, மே 17

முள்ளிவாய்க்கால் கஞ்சி எனப்படும் இறுதி யுத்தத்தின் போது மக்களின் அவலங்களை வெளிப்படுத்தும் கஞ்சி வழங்கும் செயல்பாடு நேற்று வவுனியாவில் நடைபெற்றது.

வவுனியா மொத்த மரக்கறி விற்பனை நிலையத்துக்கு முன்பாக மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பகத்தின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது. (எ-10)

# பருத்தித்துறை முனை கடற்கரையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், மே 17

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் நான்காம் நாள் நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை பருத்தித்துறை முனை கடற்கரையில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ஏற்பாட்டில் நடைபெற்றது. (எ)



# ரணிலின் சூழ்ச்சி தோற்கடிப்பு 266 சபைகளில் என்.பி.பி ஆட்சி!

## சந்தன சூரியஆராச்சி எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, மே. 17

**'எதிரணிகளை ஓரணியில் திரட்டி ரணில் முன்னெடுக்கும் அரசியல் சூழ்ச்சி வெற்றியளிக்காது. தேசிய மக்கள் சக்தி வென்றுள்ள 266 சபைகளில் நாம் ஆட்சியமைப்போம்." என்று ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சந்தன சூரிய ஆராச்சி தெரிவித்தார்.**

தேசிய மக்கள் சக்தி அறுதிப் பெரும்பான்மை பலத்தை பெறாத உள்ளூராட்சிச் சபைகளில், எதிரணிகள் ஒன்றிணைந்து ஆட்சியமைப்பது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

இந்நிலையில் இது தொடர்பில் கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் சந்தன சூரியஆராச்சி ,"தேசிய மக்கள் சக்தி 266 சபைகளில் வெற்றி பெற்றுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியால் 15 வரையான சபைகளிலேயே வெற்றிபெறமுடிந்தது.

அந்த சபைகளிலும் தேசிய மக்கள் சக்திக்கு சமாந்தரமான ஆசனங்கள் உள்ளன.

எனவே, தேசிய மக்கள் சக்தி வென்றுள்ள சபைகளில் நாம் ஆட்சியமைப்போம். எதிரணிகளை மக்கள் தோற்கடித்துள்ளனர்.

எனவே, எதிரணிகள் ஒன்றிணைந்து ஆட்சியமைக்க முற்படுவது மக்கள் விரோத செயலாகும். எனவே, மக்கள் ஆணையை நாம் நிச்சயம் பாதுகாப்போம்." எனக் குறிப்பிட்டார்.

எதிரணிகள் இன்று வங்குரோத்தடைந்துள்ளன. எனவே, ரணில் தலைமையில் எதிரணிகள் முன்னெடுக்கும் முயற்சி கைகூடாது.

நாட்டுக்காக முன்னிலையாகும் சுயாதீன நபர்கள் எமக்கான ஆதரவை வெளிப்படுத்தலாம்." -எனவும் ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# மோசமான காலநிலையால் உப்பின் உற்பத்தி வீழ்ச்சி!

கொழும்பு, மே. 17

மழையுடன் கூடிய தொடர்ச்சியான மோசமான வானிலை காரணமாக, இந்த ஆண்டு ஒரு கனசதுர உப்பைக் கூட உற்பத்தி செய்ய முடியவில்லை என்று லங்கா உப்பு நிறுவனத்தின் தலைவர் டி. நந்தனதிலக தெரிவித்தார்.

இந்த பாதகமான வானிலை அம்பாந்தோட்டையை மட்டுமல்ல, அலிமங்கட உட்பட அனைத்து உப்பு உற்பத்தி இடங்களையும் பாதித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த ஆண்டு இந்த நிலைமை மிகவும் மோசமாகியதாகவும் அவர் கூறியுள்ளார்.

லங்கா உப்பு நிறுவனம் கடந்த ஆண்டு 125,000 மெற்றிக் தொன் உப்பு இருப்பை உற்பத்தி செய்யும் என்று மதிப்பிட்டிருந்தாலும், பாதகமான வானிலை காரணமாக 40,000 மெற்றிக் தொன் மட்டுமே உற்பத்தி செய்ய முடிந்தது என்றும் தலைவர் கூறினார்.

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதத்தில் உப்பு உற்பத்தி தொடங்குவது வழக்கமாக இருந்தாலும், பாதகமான வானிலை அதற்குத் தடையாக இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

சந்தையில் உப்புத் துகள்களுக்கு பற்றாக்குறை இருந்தாலும், தூள் உப்பிற்கு பற்றாக்குறை இல்லை என்றும் அவர் கூறினார். (அ)

# கூரிய ஆயுதத்தால் தாக்க முயன்ற நபர் மீது பொலிஸ் துப்பாக்கிச் சூடு

கொழும்பு, மே. 17

தடை செய்யப்பட்ட மது பானங்கள் தொடர்பான முறைப்பாட்டையடுத்து, தெலிகட பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கினிமெல்லகஹ பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் திடீர் சுற்றிவளைப்புக்குச் சென்ற பொலிஸாரை அங்கு இருந்த நபர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்க முயன்றுள்ளார்.

அதனால் குறித்த நபர்மீது பொலிஸ் அதிகாரி ஒருவர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நபர் காலி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த 30 வயதுடைய நபரின் நிலைமை கவலைக்கிடமானதாக இல்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

# இளம் தாய் குத்தி கொலை!

கொழும்பு, மே. 17

மாத்தளை, உக்குவெல, உடங்கமுவ பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இளம் தாய் ஒருவர் கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்டுள்ளதாக சந்தேநுவர பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கொலை சம்பவம் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உக்குவெல, உடங்கமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய ஒரு பிள்ளையின் தாயொருவரே கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை எனவும் பொலிஸார் கூறினர்.

உயிரிழந்த தாயின் சடலம் மாத்தளை பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் சந்தேநுவர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# உப்பின் விலை 7 மாதங்களில் 400 ரூபாயாக உயர்ந்துள்ளது!

## விமல் வீரவன்ஸ காட்டம்

கொழும்பு, மே. 17



நாட்டில் உப்பு பைக்கெற் ஒன்றின் விலை 60 ரூபாயாக நிர்ணயம் செய்ய 76 ஆண்டுகள் ஆனது என்றும், ஆனால் 60 ரூபாயிலிருந்து 400 ரூபாயாக மாற வெறும் ஏழு மாதங்கள் மட்டுமே ஆனது என முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாட்டில் கடந்த கால அரசாங்கங்கள் எவ்வளவுதான் லஞ்சம் கொடுக்க முயன்றாலும், ஒரு பைக்கெற் உப்பு அல்லது ஒரு கிலோ அரிசிக்கு ஒரு போதும் இலஞ்சம் கொடுத்ததில்லை.

இந்நிலையில் தற்போதைய அரசாங்கத்தின் எந்தவொரு திறமையின்மைக்கும் முந்தைய அரசாங்கங்கள் மீது பழி சுமத்தப்படுகின்றது.

மோசடி மற்றும் ஊழல் இல்லாதது என்று கூறும் அரசாங்கம், உண்மையில் அவ்வாறு செய்வதன் மூலம் பணத்தை மிச்சப்படுத்தினால், ஒரு பைக்கெற் உப்பு, ஒரு கிலோ அரிசி மற்றும் ஒரு தேங்காய் எப்படி இவ்வளவு விலை உயர்ந்ததாக இருக்கும்?.

எதிர்காலத்தில் மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கவுள்ளன. இதுபோன்ற சூழ்நிலையில், பொதுமக்களின் வாழ்க்கை மட்டுமல்ல, முழு தொழில்துறை அமைப்பும் பெரும் நெருக்கடிக்குத் தள்ளப்படும்-என்றார்.

# இயலாமையை மூடி மறைக்க எத்தனிக்கின்றது அநுர அரசு!

கொழும்பு, மே. 17

அரசாங்கம் இயலாமையை மூடி மறைக்க எத்தனிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜயசிறி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அரசாங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ள மக்கள் ஆணை 7 மாத காலப்பகுதிக்குள் 23 இலட்சம் அளவில் குறைவடைந்துள்ளது.மக்களின் விரக்தியை சந்தித்துள்ள அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பத்தேவையான நடவடிக்கையை எதிரணி மேற்கொள்ள வேண்டியது அவசியமான விடயமாகும்.

உள்ளூராட்சி மன்றங்களுக்குள் உள்ள ஒற்றுமையின் ஊடாக மக்கள் நலத்திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். அரசாங்கம் தற்போது தம்முடைய இயலாமையை மறைக்க எத்தனிக்கின்றது. இத்தகைய பின்னணியில் மக்கள் எதிரணிக்கு ஆணையை வழங்கியுள்ளனராயின் எதிரணியினர் அதற்கான நடவடிக்கைளை மேற்கொள்ள வேண்டிய நிலை காணப்படுகின்றது-என்றார்.

# டிஜிற்றல் முறை ஊடாக ஊழலை ஒழிக்க முடியும்

## பிரதம நீதியரசர் முர்து பெர்னாண்டோ

கொழும்பு, மே. 17



டிஜிற்றல் கொடுப்பனவு முறைமை ஊடாக ஊழல் புற்றுநோயை சமூகத்திலிருந்து ஒழிக்க முடியுமென பிரதம நீதியரசரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான முர்து பெர்னாண்டோ தெரிவித்தார்.

அரசாங்கத்தின் டிஜிற்றல் சமூகத்தை நோக்கி நாட்டை நகர்த்தும் வேலைத்திட்டத்தின் ஒரு கட்டமான அரச டிஜிற்றல் கொடுப்பனவு தளமான ""கோவ்பே"" ஐ உயர்நீதிமன்ற கட்டமைப்புடன் இணைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதம நீதியரசர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இந்த டிஜிற்றல் கொடுப்பனவு தளத்தின் ஊடாக சட்டரீதியான பணக் கொடுக்கல் வாங்கல் முடிவு கொண்டு வரப்படுகிறது.கடந்த 200 வருடங்களாக நாட்டில் பயன்பாட்டில் இருக்கும் நீண்ட வரிசைகள் மற்றும் விண்ணப்ப படிவங் களை நிரப்புதல் உள்ளிட்ட பாரம்பரிய முறைமைகள் இதன் மூலம் நிறைவுக்கு கொண்டு வரப்படுகிறது.

அதேபோன்று சமூகத்தையும் முழு அரச கட்டமைப்பையும் சீரழிக்கும் கொடிய புற்றுநோயாக கருதப்படும் ஊழலை இந்த டிஜிட்டல் கொடுப்பனவு தளத்தின் பயன்பாட்டின் ஊடாக இல்லாமல் செய்வதற்கான வாய்ப்பு கிட்டியுள்ளதாக நான் நம்புகிறேன். எம்மால் குறுகிய காலப்பகுதிக்குள் ஊழல் இல்லாத சமூகத்தை கட்டியெழுப்ப முடியும்-என்றார். (அ)

# உற்பத்திப் பொருளாதாரத்தை மேம்படுத்த கிராமிய அபிவிருத்தியை முன்னெடுப்போம்

## ஜனாதிபதி அநுரகுமார அழைப்பு

கொழும்பு, மே. 17

நாட்டின் உற்பத்திப் பொருளாதாரத்தை மேம்படுத்த, கிராமிய அபிவிருத்திக்கு செயற்திறன் மிக்க வகையில் பங்களிப்பு வழங்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் தலைவர்கள் மற்றும் நிதி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளுடன், நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இவ்வாறு குறிப்பிட்டார்.

2024 வரவு-செலவுத்திட்ட ஒதுக்கீட்டில், உற்பத்திப் பொருளாதாரம் தொடர்பான திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்துள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, மாவட்ட மட்டத்தில் ஒதுக்கப்பட்ட அந்த நிதி ஒதுக்கீடுகளை விடுவிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதங்கள் மற்றும் திறமையின்மைகள் குறித்து, அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

கடந்த சில வருடங்களாக கிராமப் புறங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி இன்மையால், கிராமப்புற மக்கள் ஏராளமான பிரச்னைகளை எதிர்கொண்டுள்ளதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அநுரகுமார, இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், கிராமிய அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதியை உரிய கால எல்லைக்குள் சரியான முறையில் செலவிட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களை நடத்தும் போது, ஒவ்வொரு மாவட்டத்தின் அபிவிருத்தித் தேவைகளுக்கும் முன்னுரிமை அளித்து, துறை சார் அமைச்சர்களையும் அதில் இணைத்துக் கொள்ளுமாறு, ஜனாதிபதி அறிவுறுத்தினார். (அ)

கொட்டாஞ்சேனை மாணவி விவகாரம்

# விசாரணைக்கு அழைத்தும் வராத அதிபரும், ஆசிரியரும்

கொழும்பு, மே. 17

கொழும்பு - கொட்டாஞ்சேனையில் சிறுமி ஒருவர் உயிர் மாய்த்துக் கொண்ட சம்பவம் தொடர்பான விசாரணையின் அறிக்கையை வழங்குமாறு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பொலிஸ் மற்றும் கல்விசார் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

பம்பலப்பிட்டி மற்றும் கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் மற்றும் குறித்த மாணவி கல்விகற்ற பாடசாலை அமைந்துள்ள கல்வி வலய அதிகாரிகளிடம் இந்த அறிக்கைகள் கோரப்பட்டிருப்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பேச்சாளர் நிஹால் சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் நடைபெற்றிருந்தது.

இதில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதும், சம்பவத்துடன் தொடர்புடைய பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள மகளிர் பாடசாலையின் அதிபரும், உயிர்மாய்த்துக் கொண்ட மாணவியை துஷ்பிரயோகித்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ள ஆசிரியரும் கலந்து கொண்டிருக்கவில்லை.

அவர்கள் இந்த கலந்துரையாடலில் பங்கேற்காமைக்கான காரணம் தொடர்பாக அவர்களிடம் விளக்கம் கோரி கடிதம் அனுப்ப தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பேச்சாளர் தெரிவித்தார். (அ)

பிரதமர் ஹரிணி தேர்தல் விதிமீறல்

# சட்ட நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் இல்லை என்கிறது தேர்தல் ஆணைக்குழு

கொழும்பு, மே. 17

**தேர்தல் விதிமுறைகளை மீறி லாவகமாகப் பிரச்சாரத்தில் ஈடுபடுமாறு, கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் அமைதி காலத்தில், பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்திருந்தமை குறித்து தங்களால் நேரடியாக நடவடிக்கை எடுக்க முடியாது என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.**

தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க இது தொடர்பாக ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில், இந்த விடயத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டிய பொறுப்பு பொலிஸ் திணைக்களத்துக்கும் சட்ட மா அதிபர் திணைக்களத்துக்குமே இருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக எமது செய்திச் சேவைக்குக் கருத்து தெரிவித்த மேலதிக தேர்தல் ஆணையாளர் சிவசுப்ரமணியம் அச்சுதன், தேர்தலின்போது இடம்பெறும் விதி மீறல்கள் தொடர்பில் பொலிஸ் திணைக்களம் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்று அது சார்ந்த நடவடிக்கைகளையே மேற்கொள்ளும் எனக் கூறினார்.

இதேவேளைத் தனியொரு கட்சி ஆட்சியமைக்கும் அதிகாரத்தைப் பெறாத உள்ளூராட்சி மன்றங்களின் தலைமை நிர்வாகியைத் தெரிவு செய்யும் விடயத்தில் தேர்தல்கள் ஆணைக்குழு தலையிடாது என்று, தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

எனினும் தனியொரு கட்சி ஆட்சியமைக்கும் பெரும்பான்மை பெற்றுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தலைமை நிர்வாகியைத் தெரிவு செய்யும் விடயத்தில், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலையீடு இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தேர்தல் ஒன்று நடத்தப்பட்டு அதன் ஊடாக உள்ளூராட்சி மன்றங்களுக்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுவிட்டனர். இனி அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பொறுப்பு அந்தந்த கட்சிகளிடமே இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# கனடாவில் அமைக்கப்பட்ட நினைவுத்தூபி நாமலைக் கிண்டல் செய்த பாடகி சின்மயி

கொழும்பு, மே. 17

கனடாவில் தமிழ் இனப்படுகொலை நினைவுச் சின்னம் திறக்கப்பட்டமை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் எக்ஸ் தள பதிவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் பாடகி சின்மயி கருத்திட்டுள்ளார்.

கனடாவில் தமிழ் இனப்படுகொலை நினைவுச் சின்னம் திறக்கப்பட்டதன் பின்னணியில் உள்ள அரசியல் நோக்கங்கள்குறித்து தாம் கவலையடைவதாகவும், உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்டங்களில் இலங்கையின் இராணுவ நடவடிக்கைகள் தொடர்பாக எந்த இனப்படுகொலையும் நிரூபிக்கப்படவில்லை எனவும், தவறான இனப்படுகொலை கதையைக் கனடா ஊக்குவிப்பதாகவும் நாமல் ராஜபக்ஷ எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டிருந்தார்.

இந்த பதிவுக்கு எதிர்ப்பை வெளியிடும் வகையில் பாடகி சின்மயி " தெட் முழு பூசனிக்காயை ஒரே ஒரு பருக்கை சோற்றில் மறைக்க ட்ரை பண்ற மூமண்ட்" எனப் பதிவிட்டுள்ளார். (அ)

# கட்டுப்பாடுகளைத் தளர்த்தி உப்பு இறக்குமதிக்கு அனுமதி

கொழும்பு, மே. 17

இறக்குமதி கட்டுப்பாடுகளைத் தளர்த்தி உப்பு இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

இதன்படி, ஜூன் மாதம் 10 ஆம் திகதி வரை உப்பு இறக்குமதி செய்ய முடியும் என வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனூடாக, தொழிற்சாலைகளுக்குத் தேவையான பதனிடப்படாத அயடின் கலக்காத உப்பு மற்றும் நுகர்வோருக்குத் தேவையான அயடின் கலந்த உப்பு ஆகியவற்றை இறக்குமதி செய்வதற்கே இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதியின் கருத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தி எதிர்ப்பு

கொழும்பு, மே. 17

தேசிய மக்கள் சக்தி கைப்பற்றியபோதும், ஆட்சியமைக்கும் பெரும்பான்மை கிடைக்காத உள்ளூராட்சி மன்றங்களில் எதிர்க்கட்சிகள் இணைந்து ஆட்சியமைத்தால், அதற்கு எதிராக நிறைவேற்று அதிகாரம் மற்றும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் பயன்படுத்தப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அண்மையில் தெரிவித்த கருத்துக்கு, ஐக்கிய மக்கள் சக்தியும் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு அதிகாரத் துஷ்பிரயோகமாக அமையும் என்ற வகையில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருந் தார்.

இந்நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், இந்த விடயத்தில், மக்களால் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் தீர்மானிக்கும் உரிமையை ஜனாதிபதி மீறுவதாகக் குற்றம் சுமத்தினார்.

அத்துடன், அனைவருக்கும் சட்டம் சமம் என்று தெரிவித்த ஜனா திபதி, தற்போது சட்டத்திற்கு மேல் இருந்து ஆட்சி அமைக் கிறார்.

ஜனநாயகத்துக்கு எதிரான கருத்துக்களை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தொடர்ந்து தெரிவித்து வருவதாகவும் முஜிபுர் ரஹ்மான் குறிப்பிட்டார். (அ)

# வாகன இலக்கத் தகடுகள் பற்றாக்குறையால் தடங்கல்!

கொழும்பு, மே. 17

இலங்கையின் புதிய வாகனப் பதிவு செயல்முறையானது இலக்கத் தகடுகளின் பற்றாக்குறையால் தாமதங்களை எதிர்கொள்வதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது.




புதிய வாகன உரிமையாளர்களுக்கு இது தொடர்பில் வழங்கப்பட்ட கடிதத்தில், பற்றாக்குறை காரணமாக வாகன இலக்கத் தகடுகள் விநியோகம் தாமதமாகும் என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கான தற்காலிகத் தீர்வாக வாகன எண்ணை உள்ளடக்கிய மற்றும் பதிவு செல்லுபடியாகும் என்பதை உறுதிப்படுத்தும் கடிதத்துடன் வாகனங்களைப் பயன்படுத்துவதற்கு திணைக்களம் தற்காலிக அனுமதியை வழங்கியுள்ளது.

இந்த தற்காலிக நடவடிக்கை ஏப்ரல் 28 முதல் அமலுக்கு வருவதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் வெளியிட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், வாகன இலக்கத் தகடுகள் பற்றாக்குறை எப்போது தீர்வுக்கு வரும் என்பதை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் குறிப்பிட வில்லை. (அ)

# ரூபாயின் பெறுமதி மேலும் உயர்ந்தது!

கொழும்பு, மே. 17

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதியானது நேற்றைய தினத்துடன் ஒப்பிடும்போது நேற்று மேலும் உயர்ந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகப்பூர்வ நாணய மாற்று விவரங்களுக்கு அமைவாக,

அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை பெறுமதியானது நேற்று முறையே 294.30 ரூபாவாகவும், 302.65 ரூபாவாகவும் உள்ளது.

நேற்று முன்தினம் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை பெறுமதியானது 294.34 ரூபாவாகவும், 302.72 ரூபாவாகவும் காணப்பட்டது.

வளைகுடா நாணயங்களுக்கு எதிராகவும் ரூபாவின் பெறுமதி உயர்ந்துள்ளது. (அ)

# போதைப்பொருள் கடத்தல் மூவருக்கு மரண தண்டனை!

கொழும்பு, மே. 17

ஹெரோயின் வைத்திருந்தமை மற்றும் அதனை கடத்தியமை போன்ற குற்றச்சாட்டுகளுக்காக குற்றம் நிரூபிக்கப்பட்ட மூன்று நபர்களுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று மரண தண்டனை விதித்தது.

இவர்கள் மூவரும் கடந்த 2018 ஆம் ஆண்டு பேருவளையைச் சுற்றியுள்ள கடற்பரப்பில் பல நாள் மீன்பிடிக் கப்பலில் 179 கிலோ கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கடத்தலின் போது கைது செய்யப்பட்டனர்.

இதற்கிடையில், இந்த சம்பவம் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டிருந்த மேலும் ஐந்து பிரதிவாதிகளை விடுதலை செய்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபெந்திகே உத்தரவிட்டார். (அ)

# இலங்கை-செக் குடியரசு இடையிலான உறவை வலுப்படுத்த கலந்துரையாடல்

கொழும்பு, மே. 17

இலங்கை மற்றும் செக் குடியரசுக்கு இடையிலான உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் நடைபெற்றது.

வெளிவிவகார பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா மற்றும் செக் குடியரசின் வெளிவிவகார பிரதி அமைச்சர் ஜூரி கோசாக் ஆகியோருக்கு இடையில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

வெளிவிவகார அமைச்சில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் அமைதி காக்கும் நடவடிக்கைகள், சுற்றுலா மற்றும் தொழில்துறை அபிவிருத்தி குறித்து அவதானம் செலுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே, ஜேர்மனியின் வெளிவிவகாரச் செயலாளர் கலாநிதி பெர்ன்ஹார்ட் கோட்ச், வெளிவிவகார பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திராவைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது பல்வேறு துறைகள் சார்ந்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# நேர அட்டவணை பின்பற்றாமையே கெரண்டி எல்ல விபத்துக்கு காரணம்!

## தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம்

கொழும்பு, மே. 17

**இலங்கை போக்குவரத்துச் சபை உரிய நேர அட்டவணையை பின்பற்றாமையாலேயே, கெரண்டி எல்ல பகுதியில் அண்மையில் 20 இற்கும் மேற்பட்டவர்களின் உயிரைக் காவுகொண்ட பஸ் விபத்து இடம்பெற்றதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.**



இந்த விபத்துக்கு அரசாங்கம் பொறுப்பேற்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கெரண்டி எல்லயில் விபததுக்கு உள்ளான அரச பஸ், அனுமதிக்கப்பட்ட நேர அட்டவணைக்கு உட்பட்ட பஸ் சேவை இல்லை என்று அவர் கூறியுள்ளார்.

இவ்வாறு ஒழுங்கற்ற முறையில் சேவையை முன்னெடுக்கத் தீர்மானித்தமைக்கான பொறுப்பை இலங்கை போக்குவரத்துச் சபை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

பல இடங்களில் அரச பஸ்கள் உரிய நேர அட்டவணைக்கு அமைய சேவையில் ஈடுபடுத்தப்படுவதில்லை.

2012ஆம் ஆண்டு உயர் நீதிமன்றில் அறிவிக்கப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில், தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுவின் ஊடாகவே அனைத்துப் பயணிகள் பஸ் சேவைகளின் நேர அட்டவணை தயாரிக்கப்பட வேண்டும். ஆனால் அவ்வாறு இடம் பெறுவதில்லை என்ற குற்றச்சாட்டையும் கெமுனு விஜய ரத்ன முன்வைத்துள்ளார்.

# மீனவர் ஓய்வூதிய திட்டம் இந்த வருடம் நடைமுறை

கொழும்பு, மே 17

மீனவர்களுக்கான ஓய்வூதிய திட்டம் இந்த வருடத்துக்குள் நடைமுறைப்படுத்தப்படும் என்று கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், மீன்பிடிச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பிரதி அமைச்சர் ரத்ன கமகே தெரிவித்துள்ளார்.

சட்டத் திருத்தத்தை ஏற்படுத்துவதற்காக உப குழு ஒன்று அண்மையில் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பலஸ்தீன மக்களுக்காக முன்நிற்க நாங்கள் தயார்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



கொழும்பு, மே. 17

பலஸ்தீன மக்கள் அரச பயங்கரவாதத்துக்கு ஆளாகி, அவர்களின் வாழும் உரிமைகளும் மனித உரிமைகளும் பறிக்கப்படும் காலத்தை கடந்து கொண்டிருக்கின்றனர். பலஸ்தீன மக்களின் வாழ்வுரிமைக்காக நாம் அர்ப்பணிப்புடன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 15 ஆம் திகதி சர்வதேச நக்பா தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. 1948 ஆம் ஆண்டில் பலஸ்தீனியர்கள் தங்கள் வீடுகளில் இருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றி, இஸ்ரேல் ஸ்தாபிக்க வழிவகுத்த தினம் "நக்பா தினம்" என்று அழைக்கப்படுகிறது.

பலஸ்தீனியர்கள் தங்கள் தாயகத்தை இழந்த, பலஸ்தீன தாயகத்தின் அழிவின் ஆரம்பத்தை இந்நாள் குறிக்கிறது. இதன் பிரகாரம், இலங்கைக்கான பலஸ்தீன தூதரகமும் பலஸ்தீன் இலங்கை ஒருமைப்பாட்டுக்குழுவும் இணைந்து நேற்று முன் தினம் மாலை கொழும்பில் நடத்திய 75 ஆவது நக்பா தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இந்தப் பிரச்சினையைத் தீர்க்க கடந்த காலங்களில் பல சர்வதேச வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இது வெறுமனே கதைக்கு மட்டும் சுருங்கி, செயல் சார்ந்து பலவீனமான கட்டத்திற்கு வந்திருக்கும் பொழுதில், ஒரு நாடு என்ற வகையில், ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்பதைப் பொருட்படுத்தாமல், பாலஸ்தீன மக்களின் அரசியல், சமூக, பொருளாதார, கலாசார, மத மற்றும் வாழும் உரிமைகளுக்காக நாங்கள் முன்நிற்கிறோம்.

அதேபோல், பலஸ்தீன மக்கள் நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக தங்கள் தாயகத்தை இழக்கும் பல சவால்களை எதிர்கொண்டனர். அவர்களின் சுயநிர்ணய உரிமையை, அதாவது அவர்களின் நிலம் மற்றும் அவர்களது நாட்டிற்கான உரிமையை எவராலும் பறிக்க முடியாது. பாதுகாப்பான எல்லைக்குள் சுதந்திரமாக வாழும் உரிமை அவர்களுக்கு உண்டு. அந்த உரிமைக்காக நிபந்தனையின்றி முன் நிற்பேன்.

உலகளவில் பலஸ்தீன மக்களை ஒதுக்கி வைக்கவோ, ஓரங்கட்டவோ அல்லது ஒடுக்கவோ கூடாது என்பதற்கும், அவர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கும் அனைவரும் உறுதியளிக்க வேண்டும். பலஸ்தீன மக்கள் மீது நிகழ்த்தப்படும் குண்டு வீச்சு மற்றும் படுகொலைகள் தடுக்கப்பட வேண்டும்-என்றார். (அ)

# மின் தாக்கி ஒருவர் பலி!

கொழும்பு, மே. 17

கல்னேவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் நெகம்பஹா பகுதியைச் சேர்ந்த 68 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

வயலுக்கு மின் மோட்டார் மூலம் தண்ணீர் எடுக்கச் சென்ற போது மின்சாரம் தாக்கி குறித்த நபர் உயிரிழந்தார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சடலம் நெகம்பஹா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

கல்னேவ பொலிஸார் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கை வரலாற்றில் முதல் பெண் பரீட்சை ஆணையாளர்



கொழும்பு, மே. 17

இலங்கை வரலாற்றில் முதல் முறையாக, ஒரு பெண் பரீட்சை ஆணையாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார். ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே நேற்று முன் தினம் நாட்டின் 11ஆவது பரீட்சை ஆணையாளர் நாயகமாக அதிகாரப்பூர்வமாக கடமைகளைப் பொறுப்பேற்றார்.

2005 ஆம் ஆண்டு தொகுதியைச் சேர்ந்த இலங்கை கல்வி நிர்வாக சேவையில் சிறப்பு தர அதிகாரியான லியனகே, முன்னர் பரீட்சைகள் திணைக்களத்தின் நிர்வாகம் மற்றும் புலனாய்வுப் பிரிவின் ஆணையாளராகப் பணியாற்றினார்.

காலியில் உள்ள சங்கமித்தா பாலிகா வித்தியாலயத்தின் முன்னாள் மாணவியான இவர், முன்னர் கொழும்பு டி.எஸ். சேனநாயக்க கல்லூரியின் துணை முதல்வர் மற்றும் முதல்வராகப் பணியாற்றினார். ரு/ஹணு பல்கலைக்கழகத்தில் இளங்கலைப் பட்டமும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் கல்வியில் முதுகலைப் பட்டமும், களனி பல்கலைக்கழகத்தில் மொழியியலில் முதுகலைப் பட்டமும் பெற்றுள்ளார். (அ)

# II பஸ்கள் சிக்கின!

கொழும்பு, மே. 17

பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் உத்தரவின் பேரில், நீண்ட தூர சேவைகளுக்காக பயன்படுத்தப்படும் இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ்களை பரிசோதிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி,

ஹற்றனில் இருந்து நீண்ட தூர சேவைகளுக்காக பயன்படுத்தப்படும் பஸ்கள், கினிகத்தேனைப் பொலிஸாரால் திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

ஹற்றன்-கண்டி பிரதான வீதியில் உள்ள கினிகத்தேனையின் அம்பகமுவ பகுதியில் நீண்ட தூர சேவை பஸ்களின் பரிசோதனை நடைபெற்றது.

இந்த நடவடிக்கையின் போது, பயணிகளுக்கு ஆபத்தை விளைவிக்கும் வகையில் குறைபாடுகளுடன் இயக்கப்பட்ட ஐந்து இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்கள், ஆறு தனியார் பஸ்கள் உட்பட 11 சாரதிகள் மீது ஹற்றன் நீதவான் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# ஜனாதிபதி அலுவலக அதி சொகுசு வாகன ஏலம் வெற்றிகரமாக நிறைவு

கொழும்பு, மே. 17

ஜனாதிபதி அலுவலக அதி சொகுசு வாகன ஏலத்தின் இரண்டாவது கட்டமாக சொகுசு வாகனங்கள் மற்றும் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட 26 வாகனங்கள் நேற்று முன் தினம் ஏலமிடப்பட்டன.

அதன்படி, முன்னாள் ஜனாதிபதியால் தனது பதவிக் காலத்தில் அரசியலமைப்பின் 41 (1) உறுப்புரைக்கு அமைவாக பணியமர்த்தப்பட்ட ஆலோசகர்கள் மற்றும் பணிக்குழாமிற்காக வழங்கப்பட்டிருந்த 26 வாகனங்கள் இவ்வாறு ஏலமிடப்பட்டிருந்த நிலையில் அவற்றில் 17 வாகனங்கள் ஏலத்தில விற்பனை செய்யப்பட்டன.

அரசாங்கத்தின் செலவுக் குறைப்பு மற்றும் நிதிப் பொறுப்புக்கூறலை பலப்படுத்தும் நோக்கில் இந்த வாகனங்களை விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்த வாகனங்களை கொள்வனவு செய்ய மிகப்பெரிய கேள்வி காணப்பட்டதுடன், வாகன விற்பனையின் மூலம் 200 மில்லியன் ரூபாவை மிஞ்சிய வருமானம் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த சந்தர்ப்பத்தில் 108 வர்த்தகர்கள் கலந்துகொண்டனர். (அ)

# ரூ. 210 மில்லியன் பெறுமதியான தங்கத்துடன் இரண்டு பேர் கைது!

கொழும்பு, மே. 17

கட்டுநாயக்கவில் உள்ள பண் ஸ்ரீடாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் 210 மில்லியன் ரூபாய் பெறுமதியான தங்கத்தை கடத்த முயன்ற இரண்டு பயணிகள் குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் வாகன உதிரிப் பாகங்களுக்குள் தங்கத்தை மறைத்து வைத்து, விமான நிலையத்தின் வணிகர்களுக்காக நியமிக்கப்பட்ட "சிவப்பு முனையம்" வழியாகச் செல்ல முயன்றதாக தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட நபர்களில் கொழும்பு, கிராண்ட்பாஸைச் சேர்ந்த 26 வயதுடைய ஒருவரும், கண்டி, ரம்புக்வெல்லவைச் சேர்ந்த 46 வயதுடைய ஒருவரும் அடங்குவர்.

இருவரும் உள்ளூர் வணிகர்களின் சார்பாக வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு பல்வேறு பொருட்களை கொண்டு வருவதில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது.

இருவரும் நேற்று முன் தினம் காலை 8.30 மணிக்கு டுபாயிலிருந்து எமிரேட்ஸ் எயார்லைன்ஸ் விமானம் மூலம் விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

சுங்க அதிகாரிகள் சோதனை செய்தபோது, பயணிகளின் பொதிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 6.7 கிலோகிராம் எடையுள்ள தங்கம் மீட்கப்பட்டுள்ளது. (அ)

### காணி சுவீகரிக்க வனவள திணைக்களம் முயற்சியா?

# எல்லைக் கற்கள் போடும் வேலைத்திட்டம் நிறுத்தம்

மட்டக்களப்பு, மே 17

**மட்டக்களப்பு மாவட்டத்தில் வனவளத் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படவிருந்த எல்லைக் கற்கள் போடும் வேலைத்திட்டம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் பிரதி அமைச்சருமான அருண் ஹேமச்சந்திரவின் நடவடிக்கையால் உடனடியாக தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.**

மட்டக்களப்பு மாவட்டத்தின் வனவளத் திணைக்களம், தமது எல்லைகளை வரையறை செய்யும் வேலைத்திட்டத்தை கடந்த மாதம் ஆரம்பித்த போது விவசாயிகள் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களம் ஆகியோருக்கிடையில் முரண்பாட்டு நிலையொன்று தோற்றம் பெற்றிருந்தது.

இந்தப் பிரச்னை தொடர்பில் சுமூகமான தீர்வுக்குச் செல்லும் வரை வன எல்லை நிர்ணயத்தை நிறுத்தும்படி பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர கேட்டுக் கொண்டமைக்கு அமைவாக வேலைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன.

இந்த நிலையில் மீண்டும் ஒரு சில இடங்களில் வனவளத் திணைக்களம் வேலைகளை ஆரம்பிக்க முயற்சி செய்வதாக மாவட்ட விவசாயிகள், தேசிய மக்கள் சக்தியின் கல்குடா தொகுதி அமைப்பாளர் திலிப் குமாரிடம் முன்வைத்த கோரிக்கையானது அருண் ஹேமச்சந்திரவின், நேரடிக் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

இதன் பின்னர் மறு அறிவித்தல் வரும்வரை வனவளத் திணைக்கள நிர்ணய வேலைகள் அனைத்தையும் நிறுத்தி வைக்கும்படி மாவட்ட செயலாளருக்கு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர, கடிதம் மூலம் பணித்துள்ளதுடன் மேலதிக நடவடிக்கைகளை விரைந்து மேற்கொண்டு எல்லைக் கற்கள் போடும் நடவடிக்கைகள் அனைத்தையும் நிறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## திருகோணமலையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி



திருகோணமலை, மே 17

முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தை முன்னிட்டு திருகோணமலை 3 ஆம் கட்டை சந்தியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்களால் நேற்று முன்தினம் வியாழக்கிழமை முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது. அத்தோடு, நினைவஞ்சலி நிகழ்வும் நடைபெற்றது. (எ)

## விபுலானந்த அடிகளாருக்கு உலகில் முதல் கருங்கல் சிலை

### மட்டக்களப்பில் இன்று திறப்பு

மட்டக்களப்பு, மே 17

உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாருக்கு 15 அடி உயர முதல் கருங்கல் சிலை இன்று சனிக்கிழமை மாலை 04. 30 மணிக்கு மட்டக்களப்பு கல்லடிப் பாலத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

அடிகளாரின் துறவற நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழா சபையின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு கல்லடிப்பாலத்தில், இந்திய மாமல்லபுரத்தில் செதுக்கிய கருங்கல்லாலான சுவாமி விபுலானந்த அடிகளாரின் திரு உருவச்சிலை நிறுவப்படுகிறது.

அடிகளாரின் சிலையானது தனி ஒரு கருங்கல்லால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இது இந்தியாவில் மாமல்லபுரத்தில் திறமை வாய்ந்த தமிழ் நாட்டு சிற்பிகளால் செதுக்கப்பட்டது.

அடிகளாரின் சிலை அமைப்பு செயல் குழுவின் தலைவரான முத்துக்குமார் செல்வராஜா தலைமையில் சிலையமைப்பு பணிகள் நடைபெற்று இன்று அவர் தலைமையில் சிலை திறப்பு விழா நடைபெறவுள்ளது. (எ)

## முள்ளிவாய்க்கால் நினைவு வாரம் வெருகலில் நேற்று அனுஷ்டிப்பு

வெருகல், மே 17

முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தை முன்னிட்டு திருகோணமலை வெருகல் -இலங்கைத்துறை முகத்துவாரம் பகுதியில் நேற்றுக் காலை முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி பரிமாறப்பட்டதோடு, நினைவஞ்சலி நிகழ்வும் நடைபெற்றது.

இதனை வெருகல் -இலங்கைத்துறை முகத்துவாரம் பிரதேச மக்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

இதன்போது முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.

மேலும், முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த மக்களுக்காக சுடரேற்றி, மலர் தூவி நினைவஞ்சலியும் செலுத்தப்பட்டது.



இந்த நிகழ்வில் அதிகளவான பொதுமக்கள் கலந்து கொண்டனர். (எ)

## உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பதற்கு தமிழ்த் தேசிய உணர்வாளர்களுக்கு அழைப்பு

மட்டக்களப்பு, மே 17

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைப்பதற்கு தமிழ்த் தேசிய உணர்வைக் கொண்டவர்கள், இலங்கை தமிழ் அரசுக் கட்சியுடன் இணைய வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறிநேசன் தெரிவித்துள்ளார்.



மட்டக்களப்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய சூழ்நிலையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் முடிவுற்ற நிலையில் சபைகளை அமைக்கின்ற செயல்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில், அறிமுகம் செய்யப்பட்டிருக்கின்ற பிரதிநிதித்துவ முறை என்பது ஒரு சிக்கலான முறையாகும்.

இதன் ஊடாக வட்டாரத்தில் வெற்றி பெற்ற உறுப்பினர்கள், பட்டியல் மூலமாக வெற்றி பெற்ற உறுப்பினர்கள், தொங்கு நிலை ஆசனங்கள் பெற்றவர்கள் என மூன்று வகையான உறுப்பினர்கள் பல சபைகளில் இடம் பெற்றிருக்கின்றார்கள்.

ஆளுங்கட்சியாக இருந்தால் என்ன எதிர்க்கட்சியாக இருந்தால் என்ன எல்லா கட்சிகளுக்கும் சபைகளை அமைக்கின்ற விடயத்தில் சிரமங்கள், சிக்கல்கள் காணப்படுகின்றன.

அத்தோடு, மூன்று வகையான நிலைமை காணப்படுகின்றது. முதலாவது தனித்து நின்று ஆட்சி அமைக்கக்கூடிய சூழ்நிலை. ஓரிரு ஆசனங்களை மேலும் பெற்று ஆட்சி அமைக்கக்கூடிய நிலைமை.

இன்னும் சில சபைகளை அமைப்பதில் சவாலாகவும் காணப்படுகின்றது. எமது கட்சியில் பலர் வேட்பாளர்களாக போட்டியிடுவதற்கு விண்ணப்பித்திருந்தார்கள். அவ்வாறு விண்ணப்பித்திருந்தும் பலருக்கு போட்டியிட முடியாத நிலைமையும் ஏற்பட்டிருக்கலாம்.

அவ்வாறானவர்கள் உங்களுடைய பலத்தை காட்டுவதற்காக போட்டியிட்டு தமிழ்த் தேசிய உணர்வோடு வெற்றி பெற்றிருக்கலாம்.

அவர்கள் அனைவரிடமும் கேட்டுக் கொள்வது யாதெனில் கடந்த காலத்தில் வேட்பாளர் தெரிவில் சில தவறுகள் இடம் பெற்றிருக்கலாம். எனவே நீங்கள் தமிழ்த் தேசிய உணர்வு உள்ளவர்கள், சற்று விலகியிருந்தாலும் உங்களுடைய தாய்க் கட்சியான தமிழ் அரசுக் கட்சி ஆட்சியமைப்பதற்கு ஒத்துழைக்க வேண்டும் என்பதை நான் கேட்டுக் கொள்கின்றேன்- என்றார். (எ)

## வீட்டுத்திட்ட பயனாளிகளுடன் அரச அதிபர் கலந்துரையாடல்

திருகோணமலை, மே 17

திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதியில் அமைக்கப்படவுள்ள வீட்டுத் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுடன் திருகோணமலை மாவட்ட அரச அதிபர் எம். ஹேமந்த குமார கலந்துரையாடினார்.

தம்பலகாமம் - பொற்கேணி, மீரா நகர், முள்ளிப்பொத்தானை உள்ளிட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் அமையவுள்ள குறித்த வீட்டுத் திட்டங்களுக்கான பயனாளிகளுடனேயே அரச அதிபர் கடந்த 14 ஆம் திகதி சந்தித்து கலந்துரையாடினார். அத்தோடு, வீட்டுத் திட்ட பயனாளிகள் தெரிவு குறித்தும் அரச அதிபர் ஆராய்ந்தார். (எ)



# பாக். அணு உலைகளில் கதிர்வீச்சு கசிவு இல்லை

## சர்வதேச அணுசக்தி அமைப்பு உறுதி

புதுடில்லி, மே 17

**பாகிஸ்தானில் உள்ள எந்தவொரு அணு உலையில் இருந்தும் கதிர்வீச்சு கசிவு இல்லை என்று சர்வதேச அணு சக்தி கண்காணிப்பு அமைப்பு உறுதிபடத் தெரிவித்துள்ளது.**



பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலை அடுத்து, பாகிஸ்தானில் உள்ள 9 பயங்கரவாத முகாம்களை குறிவைத்து கடந்த 7ஆம் திகதி ஒப்ரேஷன் சிந்தூர் என்ற பெயரில் இந்திய பாதுகாப்புப் படை தாக்குதல் நடத்தியது. இதில், 100இற்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாக இந்திய இராணுவம் தெரிவித்தது. இந்தத் தாக்குதலில், பயங்கரவாத கட்டமைப்புகள் பலத்த இழப்பைச் சந்தித்தன.

இதேவேளை, இந்தியாவின் இராணுவ நிலைகளை குறிவைத்தும், பொதுமக்களை குறிவைத்தும் பாகிஸ்தான் இராணுவம் தாக்குதல் நடத்தியது. இதற்குப் பதிலடியாக, பாகிஸ்தான் இராணுவ நிலைகளை இலக்கு வைத்து இந்தியா தாக்குதல் நடத்தியது.

எனினும், இந்த மோதலின் போது பாகிஸ்தானின் அணு சக்தி நிலையங்கள் அமைந்துள்ள கிரானா மலைகளை இந்தியா தாக்கியதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன. இந்தத் தாக்குதலால், அணு உலை பாதிக்கப்பட்டிருக்கலாம் என்றும் பலர் சமூக ஊடகங்களில் கருத்து தெரிவித்தனர். அதேநேரத்தில், பாகிஸ்தானின் அணு உலைகளை குறிவைத்து இந்தியா தாக்குதல் நடத்தவில்லை என்று விமானப் போக்குவரத்து இயக்குநர் ஜெனரல் ஏர் மார்ஷல் ஏ.கே.பாரதி தெரிவித்தார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் கூறிய அவர், "கிரானா மலைப்பகுதியில் அணுசக்தி நிலையங்கள் இருப்பதாக நீங்கள் கூறியதற்கு நன்றி. ஆனால், அங்கு அணுசக்தி நிலையங்கள் இருப்பதாக எங்களுக்குத் தெரியாது. அங்கே என்ன இருந்தாலும் சரி, அது எங்கள் இலக்கு அல்ல. நாங்கள் கிரானா மலைகளைத் தாக்கவில்லை"-என்று கூறினார்.

இந்த நிலையில், பாகிஸ்தானில் உள்ள எந்தவொரு அணு சக்தி நிலையத்தில் இருந்தும் கதிர்வீச்சு கசிவு அல்லது வெளியீடு எதுவும் இல்லை என்று சர்வதேச அணுசக்தி அமைப்பு தெரிவித்துள்ளது. இதன் செய்தித் தொடர்பாளர் அளித்த பேட்டியில், "சர்வதேச அணு சக்தி அமைப்புக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில், பாகிஸ்தானில் உள்ள எந்தவொரு அணுசக்தி நிலையத்தில் இருந்தும் கதிர்வீச்சு கசிவு அல்லது வெளியீடு எதுவும் இல்லை"-என்று தெரிவித்தார்.

(எ)

அமெரிக்காவிடமிருந்து

# துருக்கிக்கு ஏவுகணை விற்பனைக்கு ஒப்புதல்

நியூயோர்க், மே 17

துருக்கிக்கு இலங்கை பெறுமதியில் 9,074 கோடி ரூபாய்க்கு ஏவுகணை விற்பனை செய்ய அமெரிக்கா ஒப்புக்கொண்டுள்ளது.

துருக்கியில் நேட்டோ வெளிவிவகார அமைச்சர்கள் கூட்டம் நடைபெறுகிறது. இதில், கலந்து கொள்வதற்காக அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் மார்கோ ரூபியோ அந்த நாட்டுக்கு பயணம் செய்துள்ளார்.

இந்த நிலையில், நேட்டோ நட்பு நாடுகள் வர்த்தகம் மற்றும் பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. இதன் ஒரு பகுதியாக, துருக்கிக்கு 9,074 கோடி ரூபாய் மதிப்புள்ள ஏவுகணைகளை விற்பனை செய்ய அமெரிக்கா ஒப்புதல் அளித்துள்ளது. ரூபியோ துருக்கியில் பயணம் மேற்கொண்டுள்ள நிலையில் இந்த அறிவிப்பு வந்துள்ளது. அவர், இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

அடுத்து, இஸ்தான்புல் நகருக்கு அவர் பயணம் மேற்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில், ரஷ்யா மற்றும் உக்ரைனிய அதிகாரிகளிடம் போர் நிறுத்தம் பற்றி பேச்சுவார்த்தை நடத்தப்படக் கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்க இராணுவ பாதுகாப்பு ஒத்துழைப்பு கழகம் வெளியிட்ட செய்தி ஒன்றில், இலங்கை மதிப்பில் 6,711 கோடி ரூபாய் பெறுமதியான 53 ஏ. ஐ. எம். - 120 சி - 8 ரக நவீன ஏவுகணைகளையும், 2,359 கோடி ரூபாய் மதிப்பிலான 60 பிளாக் 2 ஏவுகணைகளையும் வழங்கும்படி துருக்கி எங்களிடம் கேட்டுக் கொண்டுள்ளது எனத் தெரிவித்துள்ளது.

இவற்றின் மொத்த மதிப்பு 9,074 கோடி ரூபாயாகும். எனினும், இதற்கு அமெரிக்கப் பாராளுமன்றத்திடமிருந்து இறுதி ஒப்புதலை பெற வேண்டியுள்ளது.

துருக்கி, தன்னுடைய இராணுவத்தில் உள்ள ஆயுதங்களை நவீனமயப்படுத்தும் விரிவான முயற்சியில் ஈடுபட்டுள்ளது. 2019ஆம் ஆண்டில் ரஷ்ய தயாரிப்பான எஸ் - 400 வான் பாதுகாப்பு அமைப்பை துருக்கி வாங்கியது. இதனால், அமெரிக்காவுடன் முரண்பாடு ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து, துருக்கி மீது தடை விதித்த அமெரிக்கா, எவ் - 35 ஜெட் போர் விமானத் திட்டத்திலிருந்து துருக்கியை நீக்கியது குறிப்பிடத்தக்கது.

(எ)

# 200 இராணுவ விமானங்களை ஆய்வு செய்யும் பணி தீவிரம்

## ஜப்பானில் விபத்தையடுத்து நடவடிக்கை

ரோக்கியோ, மே 17

ஜப்பானில் 200 இராணுவ பயிற்சி விமானங்களை ஆய்வு செய்யும் பணி தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

ஜப்பானின் ஐச்சி மாகாணம் கோமாகி நகரில் விமானப் படைத் தளம் அமைந்துள்ளது. அங்கிருந்து டி - 4 என்ற இராணுவப் பயிற்சி விமானம் நேற்று முன்தினம் புறப்பட்டுச் சென்றது. நடுவானில் சுமார் 4 ஆயிரம் அடி உயரத்தில் சென்றபோது அந்த விமானம் கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்தது. பின்னர் இருகா பகுதியிலுள்ள ஒரு குளத்தில் விழுந்து அந்த விமானம் நொறுங்கியது.

இது குறித்து தகவலறிந்த மீட்புப் படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். அங்கு விமானத்தின் உடைந்த பாகங்கள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. எனினும் அதில் பயணித்தவர்களின் கதி என்ன என்பது இன்னும் தெரியவில்லை. இதனையடுத்து நாடு முழுவதும் உள்ள சுமார் 200 இராணுவ பயிற்சி விமானங்களையும் ஆய்வு செய்யும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது.

(எ)

# எல்லையில் பதற்றத்தை தணிக்க இந்தியா - பாகிஸ்தான் சம்மதம்

புதுடில்லி, மே 17

எல்லையில் பதற்றத்தை தணிக்க இந்தியாவும் பாகிஸ்தானும் சம்மதம் தெரிவித்துள்ளன.

பஹல்காம் தாக்குதலை தொடர்ந்து பாகிஸ்தான் மீது ஒப்ரேஷன் சிந்தூர் என்ற இராணுவ நடவடிக்கையை இந்தியா மேற்கொண்டது. இந்த இராணுவ நடவடிக்கையால் இந்தியா - பாகிஸ்தான் இடையே போர்ப் பதற்றம் அதிகரித்தது.

நான்கு நாட்கள் நீடித்த சண்டையில் ஏவுகணைகள், ட்ரோன்கள் மூலம் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதன்போது ஜம்மு - காஷ்மீர், பஞ்சாப் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளின் குடியிருப்புகள் மீது பாகிஸ்தான் இராணுவம் பீரங்கி குண்டுகளை வீசி தாக்கியது. இதில் உயிரிழப்புகளும் ஏற்பட்டன.

இதேவேளை, கடந்த 10ஆம் திகதி இருநாடுகளும் போர் நிறுத்தத்துக்கு ஒப்புக்கொண்டன. இதனைத் தொடர்ந்து இரு நாடுகளின் உயர் அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந்த நிலையில், இரு நாடுகளின் இராணுவ அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுவார்த்தையில் சுமூக தீர்வு எட்டப்பட்டது. இதையடுத்து, எல்லையில் பதற்றத்தை தணிக்க இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன. எல்லையில் உள்ள படைகளின் அளவை குறைக்கவும் இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன எனத் தெரியவருகிறது. (எ)

# மெக்சிக்கோவில் விபத்து 21 பேர் உயிரிழந்தனர்!

மெக்சிக்கோ சிற்றி, மே 17

மெக்சிக்கோவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வீதி விபத்தில் 21 பேர் உயிரிழந்தனர். 10இற்கும் மேற்பட்டோர் பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மத்திய மெக்சிக்கோவின் பூப்லா - ஒக்ஸாகா தேசிய நெடுஞ்சாலையில் பயணிகளை ஏற்றிக்கொண்டு பேருந்து ஒன்று சென்றுகொண்டிருந்தது. அப்போது, அதே சாலையின் எதிரே கனரக வாகனம் ஒன்று வந்து கொண்டிருந்தது. அந்த கனரக வாகனம் மற்றொரு வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்டபோது எதிர்பாராத விதமாக எதிரே வந்த பேருந்து மீது மோதியது. இதனையடுத்து மற்றொரு வான் மீதும் நேருக்கு நேர் மோதியது. இந்த மோதல்களுக்குப் பிறகு கனரக வாகனம் பள்ளத்தாக்கில் கவிழ்ந்து தீப்பிடித்து எரிந்தது.

இந்தக் கோர விபத்தில் சம்பவ இடத்திலேயே 18 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இதனையடுத்து விபத்தில் சிக்கி படுகாயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இருப்பினும் அதில் 3 பேர் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், 10இற்கும் மேற்பட்டோர் பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த நிலையில், மெக்சிக்கோவில் ஏற்பட்ட வீதி விபத்தில் 21 பேர் உயிரிழந்த சம்பவம் அங்கு பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து வழக்குப்பதிவு செய்த பொலிஸார் விபத்து தொடர்பில் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

(எ)

# அமைதி பேச்சுக்களில் புடின் பங்கேற்கவில்லை

இஸ்தான்புல், மே 17



துருக்கியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற அமைதிப் பேச்சுக்களில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் பங்கேற்கவில்லை என்று ரஷ்ய ஜனாதிபதி மாளிகை செய்தித்தொடர்பாளர் உறுதி செய்துள்ளார்.

முன்னதாக நிபந்தனைகள் இல்லாமல் உக்ரைனுடன் நேரடிப் பேச்சுக்குத் தயார் என்று புடின் தெரிவித்திருந்தார். இதனைத் தொடர்ந்து ரஷ்ய ஜனாதிபதி விரும்பினால் அவரை நேரடி பேச்சுக்களில் சந்திக்கத் தயார் என்று உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கூறியிருந்தார்.

# காஸாவில் 53,000 பேர் பலி!

காஸா, மே 17

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே காஸாவில் நீடித்து வரும் போரில் இதுவரை 53 ஆயிரம் பலியாகினர். 2 ஆண்டுகளுக்கு மேல் இடம்பெற்றுவரும் இந்தப் போரில் இதுவரை 53 ஆயிரத்து 10 பேர் உயிரிழந்தனர். காஸாவில் சமீப நாட்களாக போர் மேலும் தீவிரமடைந்து வருகிறது.

(எ)

ஈழநாடு






## ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி இன்று மீண்டும் ஆரம்பம்

### ஆர். சி. பியில் இணைந்தார் கோலி

பெங்களூரு, மே 17

இந்தியா - பாகிஸ்தான் சண்டையால் இடைநிறுத் தப்பட்ட 18ஆவது ஐ. பி. எல். கிரிக்கெட் போட்டி இன்று சனிக்கிழமை மீண்டும் தொடங்குகிறது. இன்றைய தினம் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு - கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் பெங்களூரு சின்னசாமி மைதானத் தில் மோதுகின்றன.

இந்த நிலையில், பெங்களூரு அணியுடன் விராட் கோலி மீண்டும் இணைந்துள்ளார். அவர் தொடர்ந்து பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார்.

இது தொடர்பான படம் இணையத்தில் அதிகம் வைர லாகி வருகிறது . விராட் கோலி பெங்களூரு அணியுடன் இணைந்துள்ளதால் ரசிகர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

### உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்

## கிண்ணம் வெல்லும் அணிக்கு 107 கோடி ரூபா பரிசுத்தொகை

டுபாய், மே 17

3ஆவது உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடருக்கான பரிசுத் தொகையை ஐ. சி. சி. அறிவித்துள்ளது.

டெஸ்ட் போட்டிகளில் சுவாரசியத்தை ஏற்படுத்தும் விதமாக கடந்த 2019ஆம் ஆண்டு உலக டெஸ்ட் சம்பி யன்ஷிப் என்ற தொடரை ஐ. சி. சி. அறிமுகப்படுத்தியது.

இந்தத் தொடரின் முதல் சீசனில் நியூசிலாந்து அணி யும், 2ஆவது சீசனில் அவுஸ்திரேலியாவும் கிண்ணத்தை கைப்பற்றின. 2 சீசன்களிலும் இறுதிப்போட்டிக்கு முன்னேறிய இந்திய அணி 2ஆவது இடத்தை பிடித்தது.

தற்போது 3ஆவது சீசன் (2023-25ஆம் ஆண்டு) இறு திக்கட்டத்தை எட்டியுள்ளது. இதன் இறுதிப்போட்டி யில் நடப்பு சம்பியன் அவுஸ்திரேலியா மற்றும் தென் னாபிரிக்க அணிகள் மோதவுள்ளன. இந்தப் போட்டி அடுத்த மாதம் 11 - 15ஆம் திகதி வரை லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் இந்த 2023 - 25 உலக டெஸ்ட் சம் பியன்ஷிப் தொடருக்கான பரிசுத் தொகையை ஐ. சி. சி. அறிவித்துள்ளது. இதன்படி கிண்ணத்தை வெல்லும் அணிக்கு இலங்கை மதிப்பில் 107. 42 கோடி ரூபாயும், இறுதிப்போட்டியில் தோல்வியடையும் அணிக்கு 64. 42 கோடி ரூபாயும் பரிசுத் தொகையாக அறிவிக்கப்பட் டுள்ளது.

அத்தோடு, இந்தத் தொடரில் பங்கேற்ற அணிகளுக்கு புள்ளிப் பட்டியலில் பிடித்த இடங்களை கணக்கில் கொண்டு பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் படி 3ஆவது இடம் பிடித்த இந்திய அணிக்கு 43. 03 கோடி ரூபாய் பரிசுத்தொகை அறிவிக்கப்பட்டுள்ளது.

4ஆவது இடம் பிடித்த நியூசிலாந்து அணிக்கு 35.87 கோடி ரூபாயும், 5ஆவது இடம் பிடித்த இங்கிலாந்து அணிக்கு 28.68 கோடி ரூபாயும், 6ஆவது இடம் பிடித்த இலங்கை அணிக்கு 25.09 கோடி ரூபாயும், 7ஆவது இடம் பெற்ற பங்களாதேஷ் அணிக்கு 21. 53 கோடி ரூபா வையும், 8ஆவது இடம் பிடித்த மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு 17.93 கோடி ரூபாயும் கடைசி இடம் பிடித்த பாகிஸ்தானுக்கு 14. 34 கோடி ரூபாயும் பரிசுத் தொகையாக அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## இத்தாலி ஓபின் ரெனிஸ்; இறுதியில் கோகோ காப்

ரோம், மே 17

இத்தாலி ஓபின் ரெனிஸ் தொடர் இறுதிப்போட் டிக்கு அமெரிக்க வீராங்கனை கோகோ காப் முன்னேறி யுள்ளார்.

பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள இத்தாலி ஓபின் ரெனிஸ் தொடர் ரோமில் நடைபெற்று வருகிறது. இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள இந்தத் தொட ரில் நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் அரை யிறுதி ஆட்டம் ஒன்றில் முன்னணி வீராங்கனைகளான அமெரிக்காவின் கோகோ காப், சீனாவின் கின்வென் ஜெங் ஆகியோர் மோதினர்.

இந்த ஆட்டத்தின் முதல் செட்டை 7-6 (7-3) என்ற புள்ளிக்கணக்கில் கோகோ காப்பும் 2ஆவது செட்டை 6-4 என்ற புள்ளிக்கணக்கில் கின்வென் ஜெங்கும் கைப் பற்றினர். இதையடுத்து வெற்றியாளரை தீர்மானிக்கும் 3ஆவது செட்டில் ஆட்டம் அனல் பறந்தது. இருவரும் மாறி மாறி புள்ளிகள் எடுத்தனர்.

இறுதியில் 7-6 (7-4) என்ற புள்ளிக்கணக்கில் கின்வென் ஜெங்கை வீழ்த்தி கோகோ காப் வெற்றி பெற்றார். இந்த வெற்றியின் மூலம் அவர் இறுதிப்போட்டிக்கு முன்னே றினார். இன்று நடைபெறும் இறுதி ஆட்டத்தில் கோகோ காப், இத்தாலியின் ஜாஸ்மின் பவுலினியுடன் மோதவுள் ளார். (எ)



## குஜராத் அணியிலிருந்து ஜோஸ் பட்லர் விலகல்

### குசல் மெண்டிஸுக்கு வாய்ப்பு



புதுடில்லி, மே 17

ஐ. பி. எல். போட்டிகள் இன்று மீண்டும் ஆரம்பிக்க வுள்ள நிலையில் குஜராத் அணியிலிருந்து ஜோஸ் பட்லர் விலகியுள்ளார்.

இந்தியா - பாகிஸ்தான் சண்டையால் இடைநிறுத்தப் பட்ட 18ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி இன்று சனிக்கிழமை மீண்டும் தொடங்குகிறது. போர்ப் பதற்றத் தால் இந்தியாவில் நிலவிய அசாதாரணமான சூழலால் பதற்றத்துக்கு உள்ளான வெளிநாட்டு வீரர்கள் உடனடி யாக தாயகம் திரும்பினர். தற்போது ஐ.பி.எல். போட்டி தொடங்கினாலும் முந்தைய போட்டி அட்டவணையு டன் ஒப்பிடும் போது 9 நாட்கள் நீடிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே இந்த மாத இறுதியிலிருந்து மற்ற சர்வ தேச கிரிக்கெட் தொடர்கள் தொடங்குகின்றன. தேசிய அணிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டி இருப்பதால் பெரும்பாலான வெளிநாட்டு வீரர்கள் நடப்பு ஐ.பி.எல். போட்டிகளில் முழுமையாக பங்கேற்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் குஜராத் அணியின் நட்சத்திர வீரர் பட்லர் தனிப்பட்ட காரணங்களாக ஐ.பி.எல். தொடரிலிருந்து விலகியுள்ளார். அவருக்கு பதிலாக இலங்கை அணி வீரர் குசல் மெண்டிஸ் குஜராத் அணியில் இடம்பெற்றுள்ளார். (எ)



## “ரோஹித், கோலி ஓய்வால் பதற்றமடைய வேண்டாம்”

புதுடில்லி, மே 17

ரோஹித், கோலி ஓய்வால் பதற்றமடைய வேண்டாம் என்று இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் சஞ்சய் மஞ்ரேக்கர் தெரிவித்தார்.

இந்திய கிரிக்கெட் அணி அடுத்த மாதம் இங்கிலாந் துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இந் தத் தொடர் அடுத்த மாதம் 20ஆம் திகதி தொடங்குகி றது. இந்தத் தொடருக்கான இந்திய அணிக்கு ரோஹித் சர்மா தலைவராக நியமிக்கப்படலாம் எனத் தகவல்கள் வெளியான நிலையில், சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக கடந்த 7ஆம் திகதி ரோஹித் சர்மா அறிவித்தார்.

ரோஹித்தை தொடர்ந்து விராட் கோலியும் சர்வ தேச டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். இதையடுத்து, இங்கிலாந் துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்திய அணிக்கு புதிய தலைவர், ரோஹித் மற்றும் விராட் கோலிக்கு சரியான மாற்று வீரர்களைத் தெரிவு செய்ய வேண்டிய கட்டாயத்துக்கு பி.சி.சி.ஐ. வந்துள்ளது.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் சஞ்சய் மஞ்ரேக்கர் அளித்த ஒரு பேட்டியில் கூறியதாவது, ரோஹித் சர்மா, விராட் கோலி அடுத்தடுத்து டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து விடைபெற்றதால் பல ரசிகர்கள் கவலையடைந்து இருப்பார்கள் என்பது தெரியும். ஒரு கட்டத்தில் சச்சின் டெண்டுல்கர், ராகுல் ட்ராவிட், வி.வி.எஸ். லட்சுமணன், சௌரவ் கங்குலி ஆகியோர் ஒரே நேரத்தில் ஓய்வு பெற்ற போது பதற்றம் ஏற்பட் டது.

ஆனால், சில ஆண்டுகளுக்குப் பிறகு டெஸ்ட் கிரிக் கெட்டில் இந்திய உலகின் "நம்பர் 01" அணியாக உரு வெடுத்தது. இந்தியாவில் கிரிக்கெட் பிரபலமாக இருக் கும் வரை, போதுமான அளவுக்கு திறமையான இளம் வீரர்கள் இருந்து கொண்டே இருப்பார்கள்.

ரோஹித், கோலியின் இடத்தை நிரப்ப சற்று காலம் பிடிக்கும். ஆனால், நாம் பதற்றமடையத் தேவையில்லை. சச்சின், கங்குலி உள்ளிட்டோர் ஓய்வு பெற்ற போது, நமது பந்து வீச்சு துறை முன்னேற்றம் கண்டது. அதே போன்று மீண்டும் நட்சத்திர வீரர்கள், புதிய பந்து வீச்சாளர்கள் உருவெடுப்பார்கள். இந்திய அணி தொடர்ந்து உலகின் சிறந்த அணிகளில் ஒன்றாகத் திகழும்.

மேலும் ரோஹித், கோலி அங்கம் வகித்த இந்திய அணி தான் நியூசிலாந்து, அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் மோசமான தோல்வியைத் தழுவி யது. எனவே, இந்த அணியிடம் தோற்பதற்கு எதுவு மில்லை. புதிய இந்திய அணிக்கு வாழ்த்துக்கள்- இவ்வாறு அவர் கூறினார். (எ)

## இந்தியா - இங்கிலாந்து இடையே 5 ரி-20, 3 ஒருநாள் போட்டி தொடர்

### இந்திய மகளிர் அணி அறிவிப்பு

புதுடில்லி, மே 17

இந்திய மகளிர் கிரிக்கெட் அணி அடுத்த மாதம் இங் கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 ரி - 20 மற் றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளை யாடவுள்ளது. இந்தத் தொடர் அடுத்த மாதம் 28ஆம் திகதி தொடங்குகிறது. இதில் முதலில் ரி - 20 போட்டிக ளும் அதனைத் தொடர்ந்து ஒருநாள் போட்டிகளும் நடக்கின்றன.

இந்த நிலையில், இந்தத் தொடர்களுக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணிகளுக்கு ஹர் மன்ப்ரீத் கவுர் தலைவியாகவும், ஸ்மிருதி மந்தனா துணைத் தலைவியாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்திய ரி - 20 அணியில் அதிரடி வீராங்கனையான ஷபாலி வர்மா மீண்டும் இடம் பிடித்துள்ளார்.

இந்திய ரி - 20 அணி விவரம் வருமாறு, ஹர்மன்ப்ரீத் கவுர், ஸ்மிருதி மந்தனா, ஷபாலி வர்மா, ஜெமிமா ரோட் ரிக்ஸ், ரிச்சா ஹோஷ், யாஷ்திகா பாடியா, ஹார்லீஜ் தியோல், தீப்தி சர்மா, ஸ்னே ராணா, சிறீ சரணி, சுச்சி உபாத்யாய், அமன்ஜோத் கவுர், அருந்ததி ரெட்டி, கிராந்தி கவுட், சயாலி சத்காரே.

இந்திய ஒருநாள் அணி விவரம் வருமாறு, ஹர்மன்ப் ரீத் கவுர், ஸ்மிருதி மந்தனா, பிரதிகா ராவல், ஹார்லீன் தியோல், ஜெமிமா ரோட்ரிக்ஸ், ரிச்சா ஹோஷ், யாஷ் திகா பாடியா, தேஜல் ஹஸாப்னிஸ், தீப்தி சர்மா, ஸ்னே ராணா, சிறீ சரணி, சுச்சி உபாத்யாய், அமன்ஜோத் கவுர், அருந்ததி ரெட்டி, கிராந்தி கவுட், சயாலி சத்காரே ஆகி யோர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர். (எ)

## இலங்கையை பொறுப்புக் கூற...

இலங்கை அரசாங்கத்தால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தோற்கடிக்கப்பட்டு - இலங்கையில் 26 வருட காலம் நிலவிய யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு 18ஆம் திகதியுடன் (நாளையுடன்)16 வருடங்கள் பூர்த்தியடைகின்றன. ஆனால், யுத்தம் முடிவுக்கு வந்து நீண்டகாலம் கடந்திருக்கின்ற போதிலும், பாதிக்கப்பட்ட தமிழ் பெண்ணின் நீதிக்கான போராட்டம் இன்னமும் தொடர்கிறது.

யுத்தத்தில் ஈடுபட்ட இரு தரப்பினரும் எண்ணிலடங்கா மீறல்களில் ஈடுபட்டனர். யுத்தத்தின் இறுதி வாரங்களில் அரச படையினரால் பிடிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தை சேர்ந்த பெண் போராளிகள், தமிழ் பெண்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டனர். இராணுவத்தினர் அதனை தமக்கான யுத்த வெற்றிக் கேடயங்களாகக் கருதி புகைப்படங்கள் எடுத்தும், ஒளிப்பதிவு செய்தும் வைத்திருந்தனர். அவற்றில் கொல்லப்படுவதற்கு முன்னர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கக் கூடும் எனக் கருதக்கூடிய வகையில் சடலம் கண்டறியப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தின் செய்தி வாசிப்பாளர் இசைப்பிரியாவின் புகைப்படமும் உள்ளடங்குகிறது.

இவ்வாறு அரச அனுசரணையுடன் தமிழர்களுக்கு எதிராக பாலியல் அத்துமீறல்கள் நிகழ்த்தப்பட்டன. யுத்தத்தின் பின்னர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழ் பெண்கள் மற்றும் ஆண்கள் பலர் பாதுகாப்புப் படையினரால் பாலியல் ரீதியிலான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

இருப்பினும், இலங்கையில் ஆட்சிப் பீடமேறிய அரசாங்கங்கள் பாலியல் ரீதியான வன்முறைகளிலும் சட்டவிரோத படுகொலைகள், சித்திரவதைகள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்படல்கள் உள்ளிட்ட மிக மோசமான மனித உரிமை மீறல்களிலும் ஈடுபட்ட படையினரை பொறுப்புக்கூறச் செய்வதற்குத் தவறியிருக்கின்றன.

இதேவேளை யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வட, கிழக்கு மாகாணங்களில் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் இராணுவமயமாக்கல் நடவடிக்கைகள், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை சேர்ந்த முன்னாள் பெண் போராளிகள் மீண்டும் பாலியல் அத்துமீறல்களுக்கு உள்ளாக்கப்படக்கூடிய அச்சுறுத்தலை தோற்றுவித்துள்ளது.

உண்மையையும், சர்வதேச நீதியையும் கோரி பல வருடகாலமாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் தாய்மார் மற்றும் மனைவிமார் உள்ளிட்ட பெண்கள் அச்சுறுத்தல்களுக்கும், மீறல்களுக்கும், பாலியல் ரீதியிலான துன்புறுத்தல்களுக்கும் முகங்கொடுத்துவருகின்றனர்.

இலங்கையில் குற்றவாளிகள் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு தொடர்வதன் காரணமாக பாதிக்கப்பட்ட தமிழர்கள் உள்ளக நீதிப்பொறிமுறையில் நம்பிக்கை இழந்திருப்பதுடன் அந்த நீதியை வேறு இடங்களில் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். இதேபோன்று சர்வதேச குற்றங்களில் ஈடுபட்ட இலங்கையை விசாரணைக்கு உட்படுத்துவதற்கு சகல வடிவங்களிலுமான நீதி அதிகார வரம்பு எல்லையை பயன்படுத்தவேண்டியது அவசியம் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இவ்வாறானதொரு பின்னணியில் குற்றமிழைத்தோருக்கு எதிராக வழக்குத்தொடர்வதற்கும், பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கும் வாய்ப்பளிக்கக்கூடிய ஆதாரங்களைத் திரட்டுகின்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் "இலங்கை பொறுப்புக்கூறல் செயல்திட்டம்" மாத்திரமே தற்போது எஞ்சியிருக்கின்ற ஒரேயொரு வழியாகும்.

அந்த செயல்திட்டம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் ஐ. நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் புதுப்பிக்கப்படுவதுடன், அதனை இலங்கை அரசாங்கம் ஆதரிக்க வேண்டும். இசைப்பிரியா போன்ற பெண்கள் மற்றும் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் தாய்மார் உள்ளடங்கலாக பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கான நீதியை நிலைநாட்டுவதற்கு அந்த செயல்திட்டம் தொடரவேண்டியது மிக அவசியமாகும் - என்றுள்ளது. (ஐ)

## வடக்கு...

யாழ்ப்பாணத்தில் 3 சபைகளையும் மன்னாரில் ஒரு சபையையும் தமக்கு தமிழ் அரசுக் கட்சி விட்டுத் தரவேண் டும் என்று ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி கோரியது.

இந்தக் கோரிக்கைக்கு சாதகமான சமிக்ஞையை தமிழ் அரசு தலைவர்கள் வெளியிடாதபோதிலும், இந்தக் கோரிக்கை தொடர்பில் கட்சியினருடன் பேசியே பதில் தருவதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினருடன் வலுவான தீர்மானங்கள் எட்டப்படவில்லை. இருந்த போதிலும், இன்னுமொரு சந்திப்பின் முடிவில் இறுதியான தீர்மானங்கள் எட்டப்படலாம் என்று அந்தக் கட்சியினர் தெரிவித்தனர்.

இந்த சந்திப்புகளில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி சார்பில் சுரேஷ் பிறேமசந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வேந்தன் ஆகியோர் பங்கேற்றனர். இதேபோன்று, அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் சார்பில் செல்வராஜா கஜேந்திரன், காண்டீபன், தீபன் திலீசன் ஆகியோர் கலந்து கொண் டிருந்தனர்.

மேலும்,

தமிழ்த் தேசிய கட்சிகளுடன் மாத்திரமின்றி, இரண்டு பிரதான முஸ்லிம் கட்சிகளுடனும் ஆட்சியமைப்பது தொடர்பில் இணக்கம் எட்டப்பட்டதாக பின்னர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தமிழ் அரசின் பதில் பொதுச் செயலாளர் சுமந்திரன் தெரிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## எதிர்க்கட்சிகள்...

நிர்வாகங்களை நிறுவ இரண்டு அல்லது மூன்று இடங்களை பெற்ற குழுக்களுக்கு மக்கள் வாக்களிக்கவில்லை.

பெரும்பாலான உள்ளூராட்சி அமைப்புகள் தங்கள் சொந்த நிதியை கொண்டு செயல்பட முடியாது. அவை மத்திய அரசின் நிதியை சார்ந்தே உள்ளன. எதிர்க்கட்சிகள் உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைத்தால் பிரதேச அபிருத்தி தடைப்படும். சதித் திட்டங்கள் மூலம் சிறு குழுக்கள் சபைகளை அமைப்பதை அனுமதிக்காமல் மக்கள் உறுதி செய்ய வேண்டும்.

எதிர்க்கட்சிகள் உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றினால் அதே பழைய ஊழல் நடைமுறைகளையே நாடுவார்கள். கொழும்பு மாநகர சபையில் தேசிய மக்கள் சக்தியே ஆட்சி அமைக்கும் என்றும் கூறினார். (ஐ)

## சிறாரிடையே...

சிறுவர்கள் அதிகம் பயணம் செய்தமை, அதிக கொண்டாட்டங்களில் ஈடுபட்டமையே இதற்கு காரணம்.

இதேபோன்று, மழை காலநிலையால் நுளம்புகள் பெருகியுள்ளன. இதனால், டெங்கு, சிக்குன்குனியா நோய்த் தாக்கமும் அதிகரித்து வருகிறது.

டெங்கு, சிக்குன்குனியா தாக்கமுள்ள சிறாரை மாணவர்கள் கூடும் இடங்களுக்கு அனுப்பவேண்டாம். நோய் அறிகுறியுடையவர்கள் உடனடியாக மருத்துவரை நாடவேண்டும் என்று சுகாதார துறை பெற்றோரை அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

## உப்பள தொழிலாளரின்...

ஆனையிறவில் உற்பத்தியாகும் உப்பை இங்கேயே பொதியிடவேண்டும் - அம்பாந்தோட்டை, புத்தளம், மன்னாருக்கு கட்டி உப்பாக (மூலப் பொருள்) கொண்டுசெல்லக் கூடாது, தொழிலாளர்களுக்கு தினமும் வேலை வழங்க வேண்டும், தொழிலாளர்களை தரக் குறைவாக நடத்துவதை நிறுத்த வேண் டும், உப்பள முகாமையாளரை மாற்றம் செய்ய வேண்டும், தொழிலாளர் தொழிற்



சங்கத்தை இயங்கவிடவேண் டும், ரஜ சோல்ட் என்ற பெயர் ஆனையிறவு உப்பு என மாற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து கடந்த புதன் கிழமை முதல் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தமிழின...

ஈழத்தமிழர்கள் சமூகத்தினர், உயிர் பிழைத்தவர்கள், அவர்களுடைய குடும்பத்தவர்கள், தொடரும் ஒடுக்குமுறைகளை எதிர்கொண்டுள்ளவர்களுடன் ஐக்கியமாக இருக்கிறோம்.

இலங்கை அரசாங்கத்திடமிருந்து அவர்கள் தங்கள் துயரங்களுக்கு நீதியை கோரும்வேளை, நாங்கள் தமிழ் மக்கள் குறித்தும் அவர்கள் அனுபவித்த விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்தவேண்டும். அனைவரின் உரிமைகளையும் கௌரவத்தையும் மதிக்கும் அமைதித் தீர்வுக்காக நாங்கள் பரப்புரை செய்ய வேண்டும். தமிழ் இனப்படுகொலையின் போது இடம்பெற்ற அட்டூழியங்கள் மீள நிகழாமையை உறுதி செய்ய வேண்டும். நாங்கள் அனைவரும் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக இருப்போம் - என்றும் கூறினார். (ஐ)

## 28ஆம்...

கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன்.

வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார். மேலும், "வடக்கின் கரையோரப் பிரதேசங்களில் வாழ்கின்ற மக்கள் சுனாமியால் பாதிக்கப்பட்டும் பல தடவைகள் இடம்பெயர்ந்ததாலும் தமது காணிகளுக்கான ஆவணங்களை இழந்துள்ளனர். சிலர் வெளிநாடுகளில் வாழ்கின்றனர். இந்நிலையில் அவர்களின் காணிகளை அரசுடமையாக்கும் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இது ஆங்கிலேயரின் காலனியாக இருந்தபோதிருந்த சட்டம். பழமையான இந்தச் சட்டம் பிரயோகிக்கப்படக் கூடாது. இந்த வர்த்தமானி பிரசுரம் உடனடியாக மீளப் பெறப்படவேண்டும். எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் வர்த்தமானியை மீளப்பெறா விட்டால், நாங்கள் மிகப்பெரிய போராட்டத்தை அரசாங்கத்துக்கு எதிராக நடத்துவோம். எதிர்வரும் 29ஆம் திகதி இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்படும். இது நான் ஏற்கனவே கூறியதைப்போல் ஒரு கட்சி சார்ந்த நடவடிக்கை என்று எவரும் கருதக் கூடாது. இது எங்களுடைய இருப்பின் மிக முக்கிய கூறான நிலத்தைப் பற்றிய விடயம்.

நிலம் இருந்தால்தான் இனம் தொடர்ந்து இருக்கலாம். ஆகையால் இது சகலராலும் ஆதரிக்கப்பட வேண்டிய போராட்டம். சகல அரசியல் கட்சிளுக்கும் நான் அன்பாக விடுக்கின்ற ஒரு வேண்டுகோள், இதில் இணைந்துகொள்ளுங்கள். இது எனது கட்சி நடத்துகின்ற போராட்டமாகக் கருதாமல், நாங்கள் அனைவரும் இணைந்து செய்கின்ற போராட்டமாக இருக்க வேண்டும். பொது அமைப்புகள், மக்கள், விசேடமாக பாதிக்கப்பட்ட மக்கள் இதில் பங்கேற்க வேண்டும். ஆகவே, அரசுக்குக் கொடுக்கப்பட்ட காலக்கெடு இந்த மாதம் 28 ஆம் திகதியுடன் நிறைவடைகின்றது.

ஆகவே, எதிர்வரும் 29 ஆம் திகதி போராட்டம் நடத்துவதற்கான ஆயத்தங்களை நாங்கள் செய்கிறோம். இது, இந்த நாட்டை மட்டுமல்ல உலகத்தையே உலுக்கக்கூடிய ஒரு போராட்டமாக இருக்கவேண்டும் - என்றார். (ஐ)

## கிருமி...

பலனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்தது.

நுரையீரலில் கிருமி தாக்கம் ஏற்பட்டதால் மரணம் சம்பவித்ததாக உடற்கூற்றாய்வு பரிசோதனையில் தெரிய வந்தது.

குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஐ-05)

## முன்னிலை...

முன்னெடுத்துள்ளோம். இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழு கூட்டத்துக்கு பின்னர் ஓர் அறிவிப்பை வெளியிட்டது. இதன்படி, தமிழ்க் கட்சிகளோடும் முஸ் லிம் கட்சிகளோடும் நாங்கள் பொதுவான ஓர் இணக்கப்பாட்டை எடுத்தி ருக்கிறோம்.

ஓர் உள்ளூராட்சி சபையில் கூடுதலான ஆசனங்களைப் பெற்ற கட்சி அந்த சபையில் ஆட்சி அமைக்கும். இதற்கு மற்றைய கட்சிகள் ஆதரவு வழங்க வேண்டும். இது, மற்றைய கட்சிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகிறது. இரண்டு பிரதான முஸ்லிம் கட்சிகளுடனும் நாங்கள் இணக்கப்பாட்டுடன் இருக்கிறோம். ஆனால், ஒவ்வொரு சபையாக பேசி சரியான தீர்மானத்துக்கு இன்னமும் வரவில்லை. ஆனால், பொதுவான ஒரு நிலைப்பாடாக இது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் சந்திப்புகள் நடைபெற்றுள்ளன. இன்றும் (நேற்றும்) ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் தலைவர்கள் நால்வர் நல்லூரில் எனது வீட்டுக்கு வந்திருந்தனர். எமது கட்சியின் பதில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானமும் நானும் அவர்களுடன் உரையாடினோம். சித்தார்த்தன், செல்வம் அடைக்கல நாதன், சுரேஷ் பிறேமச்சந்திரன், ஜன நாயக போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

பொது இணக்கப்பாட்டுடன் அந்தக் கூட்டணியினர் இன்னொரு கோரிக்கையையும் முன்வைத்தனர். மேலதிகமாக 4 சபைகளில் தவிசாளர் பதவியை விட்டுத் தருமாறு கோரியுள்ளனர். குறிப்பாக, மானிப்பாய் பிரதேச சபை, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, சாவகச்சேரி பிரதேச சபை, மாந்தை மேற்கு பிரதேச சபை ஆகிய சபைகளில் தவிசாளர் பதவியை அவர்கள் கோரியுள்ளனர்.

இந்த விடயத்தில் எங்களுடைய கட்சியின் தீர்மானம் ஒன்று இருக்கிறது. அதற்கு விதிவிலக்காக நாங்கள் நடப்பதாக இருந்தால், திரும்பவும் கட்சியாக தீர்மானம் ஒன்று எடுக்க வேண்டியிருக்கும் என்பதை நாங்கள் அவர்களுக்குத் தெரியப்படுத்தி இருக்கிறோம்.

அதுமட்டுமின்றி இந்தப் பொது இணக்கப்பாட்டுக்கு மாறாக செயல்படுவதானால், எமது கட்சியின் அந்தந்த பிரதேச சபையினருடன் பேசியே முடிவு எட்டப்பட வேண்டும். ஆகையால் இது சாத்தியமா என்பதை ஆரய்ந்து கூறுவ தாகத் தெரிவித்திருக்கிறோம் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# தமிழ் இனப்படுகொலைகளை பிரான்ஸ் அங்கீகரிக்கவேண்டும்

## சி.வி.விக்னேஸ்வரன் கோரிக்கை

பாரிஸ், மே. 17

இலங்கையில் தமிழ் இனப்படுகொலையை பிரான்ஸ் அரசாங்கம் அங்கீகரிக்கவேண்டும் என வலியுறுத்துவதாக தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் பாராளுமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தமிழர்களுக்கான பிரான்ஸ் உறுப்பினர்களுக்கான கூட்டத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் கருத்துரைக்கும் காணொளி ஒன்று இந்த கூட்டத்தில் ஒளிபரப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பௌத்த மதகுருமார்களால் சிங்களமயமாக்கலும் பௌத்த மயமாக்கலும் இடம்பெறுவதாக இந்த காணொளியின் வாயிலாக அவர் குறிப்பிட்டார். உள்நாட்டு யுத்தம் நிறைவடைந்து 15 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் இன்றும் வடக்கு கிழக்கில் இராணுவத்தின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது.

குறிப்பாக 2 அல்லது 3 தமிழர்களுக்கு ஒரு இராணுவ உத்தியோகத்தர் உள்ளார். அத்துடன் வடக்கு கிழக்கில் இராணுவம் கட்டுப்படுத்தும் நிலத்தின் அளவும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

தமிழர் பகுதியில் அவ்வப்போது சிங்கள குடியேற்றங்கள் அதிகரித்து வருகின்றன என்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தமது காணொளியில் தெரிவித்துள்ளார்.

அத்துடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழர்களின் தனித்துவம் தொடர்ந்தும் உறுதி செய்யப்படுவதற்கான சில காரணங்களையும் அவர் தமது காணொளியில் குறிப்பிட்டார். பிரான்சில் உள்ள 47 மாநகர சபைகளில் இலங்கையில் தமிழ் இனப்படுகொலை நடந்ததை அங்கீகரிக்கும் வகையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. (அ)

# தமிழர்களின் சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான தீர்வுக்கு ஆதரவு

## அமெ. காங்கிரஸ் உறுப்பினர் ஹேர்ப் கொனாவே தெரிவிப்பு



நியூயோர்க், மே. 17

தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அடிப்படையாக கொண்ட அரசியல் தீர்வினை ஆதரித்து அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் ஹேர்ப் கொனாவே கருத்து வெளியிட்டுள்ளார்.

சமூக ஊடக பதிவில் இதனை தெரிவித்துள்ள அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது-

நியுஜேர்சியிலும் அமெரிக்கா முழுவதிலும் வாழும் தமிழ் அமெரிக்கர்களுடன் இணைந்து இலங்கையின் இனமோதலின்போது கொல்லப்பட்ட அல்லது பலவந்தமாக காணாமலாக் கப்பட்ட பல்லாயிரக் கணக்கான தமிழர்களின் நினைவுகளை நான் கௌரவிக்கின்றேன்.

தமிழர்களின் சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான நியாயமான நிரந்தரமான அரசியல் தீர்விற்காக நாங்கள் தொடர்ந்தும் பரப்புரை செய்கின்றோம் - என்று குறிப்பிட்டுள்ளார். (அ)

# மே 19இல் விசாரணை குழுவில் முன்னிலையாகும் தேசபந்து!

கொழும்பு, மே. 17

பணி இடைநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், தனக்கு எதிரான தவறான நடத்தை மற்றும் கடுமையான பதவி துஷ்பிர யோகம் தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரித்து அறிக்கை அளிக்க நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் முன் எதிர்வரும் திங்கள்கிழமை ஆஜராக உள்ளார்.

விசாரணைக் குழு உயர் நீதிமன்ற நீதியரசர் பி.பி. சூரசேன தலைமையில் செயல்படுகிறது.பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை அப்பதவியிலிருந்து நீக்குவதற்கான விசாரணைக் குழுவொன்று அமைக்கப் படவேண்டும் என்ற தீர்மானம் ஏப்ரல் 08 பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

பொலிஸ்மா அதிபர் ரி.எம்.டபிள்யூ.தேசபந்து தென்னக்கோனை அப்பதவியிலிருந்து நீக்குவதற்கான விசாரணைக் குழுவொன்றை நியமிப்பது தொடர்பான பிரேரணை முன்வைப்பதற்கான தீர்மானம் ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் 115 பேரின் கையொப்பத்துடன் கடந்த மார்ச் 25 ஆம் திகதி சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவிடம் கையளிக்கப்பட்டது. (அ)

# புதிய மைல்கல்லை எட்டியுள்ள நாட்டின் சூரிய மின் உற்பத்தி!

கொழும்பு, மே. 17

இலங்கை முழுவதும் மேற்கூரைகளில் அமைக்கப்பட்ட சூரிய மின்சக்தி நாட்டின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் புதிய மைல்கல்லை எட்டியுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இலங்கை முழுவதும் மேற்கூரைகளில் அமைக்கப்பட்ட சூரிய மின்சக்தி திறனானது மே 1 ஆம் திகதி வரை 1,700 மெகாவோட் என்ற எல்லையை அடைந்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

நாட்டின் மக்கள், வணிகங்கள் மற்றும் நிறுவனங்களின் பசுமையான மற்றும் நிலையான எரிசக்தி எதிர்காலத்திற்கான அர்ப்பணிப்பு இந்த முன்னேற்றத்தில் பிரதிபலிக்கிறது எனவும் மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, தற்போதைய தேவைகளுக்கு ஏற்ப புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் கவனம் செலுத்தியமை தொடர்பாக, மின்சார சபை அனைத்து சூரிய மின்சக்தி உற்பத்தியாளர்களுக்கும் தமது நன்றியை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மரக்கறி விலை உயர்வு

கொழும்பு, மே. 17

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக, பொருளாதார மத்திய நிலையங்களில் மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு கிலோகிராம் போஞ்சி 565 ரூபாவுக்கும் , ஒரு கிலோகிராம் கரட் 865 ரூபாவுக்கும் , ஒரு கிலோகிராம் கத்தரிக்காய் 375 ரூபாவுக்கும், ஒரு கிலோகிராம் பச்சை மிளகாய் 265 ரூபாவுக்கும் , மற்றும் ஒரு கிலோகிராம் தக்காளி 525 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

நாரஹேன்பிட்டி பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு கிலோகிராம் கரட் 1000 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்தோடு, ஒரு கிலோ கிராம் கத்தரிக்காய் 700 ரூபாவிற்கும், ஒரு கிலோகிராம் பச்சை மிளகாய் 600 ரூபாவிற்கும், ஒரு கிலோகிராம் போஞ்சி 660 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின் றது. (அ)

# அமெ. எரிசக்தி திணைக்களத்தால் கடற்படைக்கு புதிய உபகரணங்கள்

கொழும்பு, மே. 17

இலங்கைக் கடற்படைக்கு, அமெரிக்க எரிசக்தித் திணைக்களத்தால் அணு மற்றும் கதிரியக்கப் பொருட்களை கண்டறியும் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இலங்கைக் கடற்படைக்குள் நிறுவப்பட்ட இரசாயணவியல், உயிரியல், கதிரியக்க மற்றும் அணுசக்தி பிரிவுகளால் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளுக்குத் தேவையான அணு மற்றும் கதிரியக்கப் பொருள் கண்டறிதல் உபகரணங்களை கடற்படைத் தளபதியிடம் ஒப்படைக்கும் நிகழ்வு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தலைமையில் கடற்படைத் தலைமையகத்தில் நடைபெற்றது.

இலங்கை கடற்படைக்கும் அமெரிக்காவின் தேசிய அணுசக்தி பாதுகாப்பு நிர்வாகத்துக்கும் இடையே கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி அணு மற்றும் கதிரியக்க பொருள் கண்டறிதல் கருவிகள் வழங்கப்பட்டுள்ளதுடன், மேலும், இலங்கை கடற்படையின் இரசாயனவியல், உயிரியல், கதிரியக்க மற்றும் அணுசக்தி பிரிவுகளால் முக்கிய துறைமுகங்கள் மற்றும் கடல் எல்லைகளில் ஆய்வுகளை மிக திறமையாகவும் திறம்படவும் மேற்கொள்ள உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான இரு தரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதையும், கடல்சார்கள விழிப்புணர்வுக்கான கூட்டு அணுகுமுறையையும் குறிக்கும் வகையில், உபகரணங்கள் ஒப்படைப்பு விழாவில், முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கொட்டாஞ்சேனை சிறுமி மரணம்

# கல்வி நிலைய உரிமையாளர் மீது நடவடிக்கை எடுக்க இடமில்லை!

கொழும்பு, மே. 17

கொழும்பு - கொட்டாஞ்சேனை சிறுமியின் மரணத்துடன் சம்பந்தப்படுத்தப்படும் தனியார் கற்கை நிலையத்தின் உரிமையாளருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாது என சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் சட்ட அமுலாக்கல் பிரிவின் பணிப்பாளர் சஜீவனி அபேகோன் தெரிவித்துள்ளார்.

உயிர்மாய்த்துக் கொண்ட சிறுமியின் தாயாரது வாக்குமூலத்தை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு அவருக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது என அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-குறித்த சம்பவம் தொடர்பாகத் தொடர்ச்சியான விசாரணைகள் இடம்பெறுகின்றன. தாயாரின் வாக்குமூலத்தை மாத்திரம் அடிப்படையாக வைத்துக் குறித்த மேலதிக வகுப்பின் உரிமையாளருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை



எடுக்கச் சட்டத்தில் இடமில்லை.இது தொடர்பாக குறித்த தனியார் வகுப்பைச் சேர்ந்த 20 இற்கும் மேற்பட்ட மாணவர்களின் வாக்குமூலங்கள் பதிவாகியுள்ளன.

எந்தவொரு நபரும் அந்த வகுப்பு நிலையத்தின் உரிமையாளருடன் தொடர்புபடுத்தப்படும் சம்பவம் குறித்து நேரடியான சாட்சிகளை வழங்கவில்லை.

எவ்வாறாயினும் இந்த விசாரணைகள் கைவிடப் படாமல் தொடர்கின்றன- என்றார்.

அதேநேரம், குறித்த மாணவி கடந்த ஆண்டு துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஆசிரியர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படாமை மற்றும் கல்வி அமைச்சுக்கு அறியப்படுத்தாமை தொடர்பான பிரச்சினை ஒன்று உள்ளது.இதுதொடர்பாக குறித்த மகளிர் பாடசாலையின் அதிபரிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது என்றும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் சட்ட அமுலாக்கல் பிரிவின் பணிப்பாளர் சஜீவனி அபேகோன் தெரிவித்துள்ளார்.(அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.05.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.